# வெள்ளையர் கொள்ளைக்கு நிதிமந்திரி டாக்டர் என்.எம். உதவி

# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 | இதழ் 43 | ஜூலை 4, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10

## கூட்டரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கம் நாட்டுக்கு நன்மை தராது

**ஐந்தாவது பாராளுமன்றத்தின், ஐந்தாவது சபைக் கூட்டத்தை துவக்கி வைத்து, இலங்கையின் கவர்னர் ஜெனரல் நிகழ்த்திய சிம்மாசனப் பிரசங்கம், சுதந்திரக் கட்சி - சமசமாஜக் கட்சி கூட்டரசாங்கத்தின் கொள்கையைப் பிரதிபலித்தது.**

இந்த உரையின் ஒவ்வொரு அம்சத்தையும் அணுகி ஆராய்வதற்கு போதிய காலம் கிடைக்கவில்லை. என்ருலும், பொதுவாகப் பார்க்கும்பொழுது ஒரு விஷயம் இந்த உரையிலிருந்து புலப்படுகிறது. இந்த விஷயம் என்னவெனில், சென்ற ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட சிம்மாசனப் பிரசங்கங்களுக்கும் கூட்டரசாங்கத்தின் இப்பிரசங்கத்திற்கும் அடிப்படையில் அதிக வித்தியாசமில்லை. இந்தப் பிரசங்கத்திலும், பழைய வாக்குறுதிகளை மீண்டும் புதுப்பித்திருக்கிருர்கள். பழைய மருந்துகளை புதிய சிட்டிக்களில் அடைத்து மக்கள் முன்வைத்திருக்கிருர்கள்.

இந்தப் பிரசங்கத்தில், கூட்டரசாங்கம் உருவாக்கப்பட்ட போது பிரகடனப்படுத்தப்பட்ட 14 அம்சத் திட்டம் உள்ளடக்கப்பட்டிருப்பது தெளிவு. இந்த 14 அம்சத் திட்டம்பற்றி ஏற்கெனவே நாம் விமர்சித்துள்ளோம். இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் எதையுமே தீர்க்க இதில் மார்க்கம் காட்டப்படவில்லை.

காலனி, நிலப்பிரபுத்துவ பொருளாதார அடிப்படை நம் நாட்டை ஆக்கிரமித்திருக்கும்வரை, பொருளாதார நெருக்கடி தீராது என்று நாம் அறுதியிட்டுக் கூறி வந்துள்ளோம். இதை உணரவும் கூட்டரசாங்கம் தவறிவிட்டுள்ளதை இப்பிரசங்கம் தெளிவாக்குகிறது. இப்பிரசங்கத்தில் ஏகாதிபத்திய பொருளாதாரப் பிடிப்பையும், நிலப்பிரபுத்துவ ஊடுருவலையும் அகற்ற, ஒழித்துக்கட்ட எதுவுமே கூறப்படவில்லை.

நம் நாட்டுப் பொருளாதாரத்தின் அடிப்படையாகவுள்ள விதேசிகளுக்கு இன்று சொந்தமாகவிருக்கும் தேயிலை, ரப்பர் தோட்டங்கள் 'பற்றியும் இப்பிரசங்கத்தில் பேச்சில்லை. இத்தோட்டங்களிலிருந்தும், மற்றும் கம்பெனிகளிலிருந்தும் வெளிநாட்டார் தம் தம் நாடுகளுக்குக் கடத்தும் லாபம், மூலதனங்களை முற்ருக நிறுத்துவது பற்றி முற்ருக மறந்துவிட்ட கூட்டரசாங்கம், அதைக் கட்டுப்படுத்தும் பிரச்சினையிலாவது நடவடிக்கை எடுக்கும் என்று கூறுவதற்கில்லை.

வெளிநாட்டு இறக்குமதி வர்த்தகத்தின் ஒரு பகுதியை தேசியமயமாக்கப் போவதாகவும், தனி நபர்கள் வசம் மற்றவைகள் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனுல், ஏற்றுமதி வர்த்தகம்பற்றி எதுவுமே தீர்க்கமாக இன்றும் கூறப்படவில்லை. அதிலும், தேயிலை, ரப்பர் போன்ற, நம் நாட்டின் பொருளாதார ஜீவப் பொருளாகவுள்ளவை சம்பந்தப்பட்ட ஏற்றுமதி வர்த்தகம் இன்னும் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளின் வசமே தொடர்ந்து இருக்கிறது. இதுபற்றியும் இப்பிரசங்கத்தில் பேச்சில்லை.

ஆட்சியாளரின் இப்போக்கு புதுமையானதல்ல. காரணம், கௌரவ டாக்டர் என். எம். பெரேரா மந்திரிப் பதவி ஏற்றபின்னர் செய்த முதல் கைங்கரியம், தேயிலை ஏலப் பகுதியை நிராகரித்ததாகும். இந்த நடவடிக்கை மூலம் டாக்டர் என். எம். பெரேரா வெள்ளைக் கொள்ளையருக்கு அதிக கொள்ளையடிக்க வாய்ப்பளித்தார்.

இடதுசாரியல்லாத ஆர். ஜி. சேனநாயக்கா, காலஞ்சென்ற பண்டாரநாயக்கா ஆட்சியில் வர்த்தக மந்திரியாக இருந்த போது மிகக் கஷ்டப்பட்டு உருவாக்கிய இந்தத் தேயிலை ஏலப் பகுதி, இலங்கையர்களுக்கு அதிகம் பயனளிப்பதாக இருந்தது. ஆனுல், சமசமாஜ டாக்டர் என். எம். பெரேராவின் இந்த நடவடிக்கையால், லண்டன் தேயிலை ஏலப் பகுதிக்கு நல்லதொரு வாய்ப்புக் கிட்டியுள்ளது (இது பற்றிய விபரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்,)

வெளிநாட்டு வங்கிகளையும், வெளிநாட்டுக் கம்பனிகளையும் ஆட்சியின் தேவைகளுக்கு எடுக்கப்போவதாக இப் பிரசங்கம் குறிப்பிட்டிருப்பினும் கூட, இவைகளினுல் நாட்டுக்கு போதியளவு நன்மைகிட்டப்போவதில்லை. இவை பூரணமாக தேசியமயமாக்கப்படும்வரை, நாட்டுக்கு நற்பயன் கிட்டப்போவதில்லை.

பத்திரிகை ஏகபோகிகளின் அதிகாரத்தைத்தகர்க்கப்போவதாக சிம்மாசனப் பிரசங்கம் வாக்குறுதி தருகிறது. ஆனுல், இது ஐந்தாவது முறை. இந்த வாக்குறுதி எவ்வித உறுதிப் பிரகடனமும் இல்லை.

ஊழல்கள், வீண் விரயங்கள், திறமையின்மை ஆகியவைகளை ஒழித்துக் கட்டுவது சம்பந்தமாக இதில் குறிப்பிட்டிருக்கிறது. என்ருலும் இவை செயல்முறை விவகாரங்கள் வெறும் வாக்குறுதிகளால் இவைகளை ஒழித்துக்கட்டிவிட முடியாது.

முதலாளித்துவ அரச நிர்வாகத்தின் கீழ் இதுவரைநாம் பெற்றுள்ள அனுபவங்களின் அடிப்படையில்இவ்வாக்குறுதிகளைநாம் பரிசீலனை செய்தால், இவை பயன்தரும் அளவில் வெற்றிகரமாக செயல்படாது என்றே கூறத் தோன்றுகிறது.

வாழ்க்கைச் செலவுப் புள்ளியைக் குறைக்க ''என் அரசாங்கம்'' நடவடிக்கை எடுக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இது பற்றி எவ்வித விளக்கங்களும் தரப்படாமல், வெறும் சொற்களால் மாத்திரம் இப் பிரச்சினை வலியுறுத்தப் பட்டது இதுதான் முதல் தடவை. ஆனுல் இதே வேளையில் வாழ்க்கைப் புள்ளியோ வேறு எந்த காலத்திலும் இல்லாத அளவில் கூடியுள்ளது யாவரும் அறிந்ததே.

''சாம்ராஜ்யக் கூட்டணியில் இருக்கும் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள என் அரசாங்கம், அதில் அங்கம் வகிப்பதை அங்கீகரிக்கிறது'' இதிலிருந்து நாம் ஒரு உண்மையை உணரமுடிகிறது. இலங்கையைக் குடியரசாக்கும் திட்டத்திலிருந்து ஆட்சியினர் நழுவிப் போகிருர்கள் என்பதே அது.

எது எப்படி இருப்பினும், கூட்டரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கத்தின் கொள்கை தெள்ளத்தெளிவாகிவிட்டது.

டாக்டர் என். எம். பெரேரா உள்ளிட்டு, சமசமாஜக் கட்சியிலுள்ள சிறந்த பொருளாதார நிபுணர்களைத் தம் வசப் படுத்திக் கொண்டது மூலம் முதலாளித்துவம் தன் ஆதிக்கத்தைத் தொடர்ந்து நீடிக்க வழி செப்பனிடப்பட்டுள்ளது இதிலிருந்து புலனுகிறது. அதோடு, நாட்டு மக்களின் ஏகோபித்த எதிர்ப்பைப் பெற்றுள்ள ஊழல், மோசடிகள் வீண் விரயம் போன்றவை சம்பந்தமாக வெறும் ஒட்டுப் பிளாஸ்திரி போடுவது மூலமாக சமசமாஜ மந்திரிகள், மக்களின் எதிர்ப்பை இலகு படுத்தி, ஊழல் காரர்களுக்கும், மோசடிக் கும்பலுக்கும் பாதுகாப்பளித்துள்ளனர்.

கூட்டரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கம் வெறும் ஒட்டுப் பிளாஸ்திரி சமாசாரமாகும், இதில் அவர்கள் ஒரு வேளை வெற்றி பெறலாம். ஆனுல், ஈழத்திருநாட்டு மக்களின் விமோசனப் பாதையை சீராக்கவும், பொருளாதார வளர்ச்சியை நேராக்கவும் இவர்களினுல் எதுவுமே நடக்காது என்பதுமட்டும் இன்று தெள்ளத் தெளிந்த உண்மையாகும்.

### அடுத்த இதழில்

எட்டு மணி நேர வேலையும்-
சமசமாஜ மந்திரிகளும்

தோழர்:
நா. சண்முகதாசன்.

★

திரிபுவாதிகளை எதிர்த்த
போராட்டம்

தோழர்:
டி. என். ஐடிட்,
இந்தோனேஷிய
கம்யூனிஸ்ட் கட்சித்
தலைவர்.

★

முற்போக்கு இலக்கியப் பகுதி,
மற்றும் பல அம்சங்கள்.

## திரிபுவாதத் துரோகிகள்

### தலையங்கம்

முதலில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை நிராகரித்து, பின்னர் பாட்டாளி வர்க்கத்தின் தனித் தன்மையை மறந்து, இறுதியில் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கட்சியைப் பயங்கரமான நிலைமைக்குத் தள்ளிவிட்டதே திரிபுவாதத்தின் மறைக்க முடியாத விளைவு.

ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தவராக இருந்து திரிபுவாதத்திற்கு வால் பிடித்த கோட்டே பாராளுமன்ற அங்கத்தவர் ஸ்டான்லி திலகரத்ன அரசாங்கக் கட்சியில் இணைவதன் மூலம், இந்த ஆபத்து மிகவும் தெளிவாக நிரூபிதமாகியுள்ளது. ஸ்டான்லி திலகரத்னவின் இச்செயல் திரிபுவாத செயல் முறையின் தர்க்க ரீதியான முடிவாகும். திரிபுவாதிகள் இறுதியாக எங்கே சென்று முடிவார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

திரிபுவாதியான ஸ்டான்லி திலகரத்ன தனது பயணத்தின் இறுதிக் கட்டத்திற்கு சென்றுள்ளார். ஆனுல் மற்றைய திரிபுவாதிகள் நடுவழியில் செய்வதறியாதுதிகைத்து நிற்கின்றனர். என்ருலும் அவர்கள் இப் பயணத்தின் முடிவுக்குப் போகும் நாள் வெகு தூரத்திலில்லை. முன் பக்கமாகக் கதவு திறக்கும்வரை காத்திருக்கும் பொறுமையில்லாத ஸ்டான்லி திலகரத்ன பின் புறக் கதவு வழியால் நுழைந்துள்ளார், மற்றைய திரிபுவாதிகள் இன்னும் தடுமாறிக் கொண்டிருப்பது முன் பக்கமாகக்கதவு திறக்கும் வரைக்கும் தான்.

தேசிய முதலாளி வர்க்கத்தின் தலைமையில், சகல முற்போக்கு சக்திகளையும் திரட்டி தேசிய முதலாளி வர்க்கத்தின் மூலம் இந்த நாட்டில் சோஷலிஸத்தை ஸ்தாபிக்க முடியுமெனத் தமது காட்டிக்கொடுப்பு நாடகத்தை சம்பூரணமாக முடித்துக்கொண்ட கோட்டே பாராளுமன்ற அங்கத்தவர் ஸ்டான்லிதிலகரத்ன பொய் விளக்கம் கூறியுள்ளார். ஸ்டான்லி திலகரத்னவின் இக் கொள்கைக்கும் திரிபுவாதிகள் நீண்ட நாள் பின்பற்றி வந்த கொள்கைக்கும் வித்தியாசமேயில்லை. சோஷலிஸத்தை ஸ்தாபிப்பதற்கு மிக அத்தியாவசியமான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சம்பந்தமான கொள்கையை விட்டு அவர்கள் முதலாளி வர்க்கத்தின் தேவைகளுக்காக' முதலாளித்துவ முறையை ஒழித்து சோஷலிஸத்தை ஸ்தாபிப்பதெனக் கூறுவது கேலிக்கிடமாகியுள்ளது புதுமையானதல்ல.

தொழிலாளர் வர்க்க இயக்கத்திற்குள் முதலாளித்துவக் கருத்துக்கள் நுழைவதே திரிபுவாதம் என மார்க்சிஸ-லெனினிஸவாதிகள் கருதுகின்றனர், முதலாளி வர்க்கத்திற்குச் சேவை செய்பவர்களே திரிபுவாதிகள். பாட்டாளி வர்க்கக் கட்சியை அமுக்கி, அதனை முதலாளிவர்க்கத்திற்கு அடிபணியச்செய்வதே திரிபுவாதம்.

இந்தக் கணிப்பு, முழுக்க முழுக்க சரியென்பது இலங்கைத்திரிபுவாதிகளால் பெரிதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு முன்னர் ஸ்டான்லி திலகரத்ன, கடைப்பிடித்த கொள்கையினதும், தற்பொது மற்றைய திரிபுவாதிகள் கடைப்பிடிக்கும் கொள்கையினதும் விளைவு எதிர்காலத்தில் எமதுநாட்டுப் பாட்டாளி வர்க்கம் நிராயுதபாணியாகி முதலாளி வர்க்கத்திற்கு அடிபணிந்து, நடுவழியில் நிற்பதேயாகும். என்ருலும் இத்தகைய விளைவு ஏற்படமாட்டாது. ஏனென்ருல், அதிர்ஷ்டவசமாக கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயிருந்த நேர்மையான மார்க்சிஸ-லெனினிஸ வாதிகள், தீவிரமான போராட்டம் நடாத்தி, திரிபுவாதிகளைத் தனிமைப் படுத்தி, கட்சியையும், கட்சியின் தனித் தன்மையையும் பாதுகாத்து அதன் மூலம் பாட்டாளி வர்க்கத்திற்குத் தலைமைதாங்கக் கூடிய பலம்மிக்க அணியை வளர்த்ததேயாகும்.

சென்ற ஜனவரியில் நடைபெற்ற எமது 7—வது மாநாடு, இப்பணியை நிறைவேற்றியிருக்காவிட்டால் இன்னும் சிறிது காலத்தில், எமது நாட்டில், கம்யூனிஸ்ட் கட்சியென்று ஒன்று மிஞ்சியிருக்க மாட்டாது.

# இணையற்ற தியாகத்தால் வளர்ந்த எம்கட்சிக்கு 21 வயது

## போலித் தலைவர்களின் பகல் வேஷம் கலைகிறது

ஜுலை 3-ந் தேதி எமது கட்சியின் 21-வது ஆண்டு விழாவாகும். இதை யொட்டி இக்கட்டுரையை இங்கு வெளியிடுகிறோம்.

பாட்டாளி வர்க்கத்தின் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியின் 21-வது வயது ஜுலை மாதம் 3--ந் திகதி ஆரம்பிக்கின்றது. இது இலங்கையின் சரித்திரத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி மாத்திரமல்ல, சரித்திரத் திருப்பத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் ஒரு மாற்றமுமாகும்.

ஈழத் திருநாட்டின் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த இன்றைய கால கட்டத்தில், கம்யூனிஸ்ட் கட்சியில் (உண்மையான மார்க்சிஸ-லெனினிஸத்தை ஏற்றுக்கொண்ட ஒரு கட்சியில்) அங்கத்துவம் வகிப்பதில் பெருமைப்படுவதற்கு நமக்கு உரிமையுண்டு. நீண்ட நெடுங்காலமாக இந் நாட்டு தொழிலாளிகளையும் விவசாய மக்களையும், அதிகப்படியாக புத்தி ஜீவிகளையும்; அதி தீவிர புரட்சி பேசி சிந்தனை மயக்கத்தில் அமிழ்த்தி வைத்திருந்த சமசமாஜக் கட்சியையும், அதன் குபேரத் தலைவர்களையும் மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய சிறந்த தொரு வாய்ப்பு மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது. சமசமாஜக் கட்சியின் இந்த அப்பட்டமான நிர்வாண கோலத்தைக் கண்டு கம்யூனிஸ்டுகளாகிய நாம் மற்றைய எவரையும் விட மகிழ்ச்சி கொள்வதற்கு உரிமையுண்டு.

### விஷக் கருத்து

ஏகாதிபத்தியத்தை பொது எதிரியாகக்கொண்டு இந் நாட்டில் வளர்ந்து வந்த இடதுசாரி இயக்கத்தை டிராட்ஸ்கிய விஷக் கருத்துக்களைப் புகுத்தி சீர்குலைத்த சிறுமை இன்றைய சமசமாஜத் தலைவர்களுக்கு உண்டு. இதனுடைய பயங்கரத் தன்மையை சரியாகவே உணர்ந்த தொழிலாளி வர்க்கம், அன்றைய தன்னுடைய வர்க்கக் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்து உறுதிப்படுத்திக் கொண்டதோடு, தனது வர்க்கத்தினதும், மக்களினதும் பொது எதிரியான ஏகாதிபத்தியத்தை ஒரு புறத்திலும், மறுபுறத்தில் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் சித்தாந்தமான மார்க்சிஸ-லெனினிஸத்திற்கும், பாட்டாளி வர்க்கத்தின்சர்வாதிகாரத்திற்கும்நேர் எதிரான டிராட்ஸ்கிஸத்தை எதிர்த்து இரு முனைப் போராட்டங்கள் நடத்தி, இந் நாட்டுத் தொழிலாளி வர்க்கம் தன்னையும் தனது அரசியல் கட்சியான கம்யூனிஸ்டு கட்சியையும் வளர்த்துக்கொண்ட சரித்திரத்தை யாராலும் மறுக்கவும் மறைக்கவும் முடியாது.

### சி. டி. யூ. எப்.

சமசமாஜக் கட்சி தன்னுடைய பண பலத்தாலும், குலப் பெருமையாலும், கிரிமினல் வழக்கறிஞர்களின் பத்திரிகைப் பிரச்சாரங்களாலும், கூடுதலான பாராளுமன்ற ஆசனங்களைக் காட்டியும், கிராமப் புறங்களில் ''பொறலு கொட, குணவர்தன, சில்வா'' க் குடும்பங்களின் செல்வாக்கையும், தோட்டச் சொந்தக்காரர்களின் குபேர அந்தஸ்தையும், பட்டதாரிகளின் செல்வாக்கையும் பரந்த அளவில் உபயோகித்துத் தனது கட்சிக்கு ஆள் சேர்த்து பலப் படுத்திக்கொள்ளும் காலத்தில், தனியாக தொழிலாள வர்க்கத்தில் உறுதியான நம்பிக்கை வைத்து, அவர்களை ஸ்தாபன ரீதியாக ஒன்று திரட்டி, ஏகாதிபத்திய, ஏகபோக வெள்ளைக்கார கம்பெனி முதலாளிக்கு எதிராகவும், தேசிய ஏகபோக முதலாளிகளுக்கு எதிராகவும் பொருளாதார உரிமைப் போராட்டங்கள் நடத்தி, பிரமாண்டமான சக்திவாய்ந்த இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தைத் கட்டிவளர்த்து, தொழிலாளர்கள் மத்தியில் குறைந்த அளவிலாவது மார்க்சிஸ-லெனினிஸ விஞ்ஞான பூர்வமான சோஷலிஸ எண்ணங்களை பரப்பி, ஓரளவிலாவது புரட்சிகர குணும்

**மரியதாசன்**

சங்களைக்கொண்ட தொழிலாளி வர்க்கத்திலிருந்து கம்யூனிஸ்டுகளை வளர்த்தெடுத்து அவர்களின் துணைகொண்டு கம்யூனிஸ்ட் கட்சியை பலப்படுத்திக்கொண்ட சரித்திரமும், பெருமையும் நமக்கு உண்டு.

### முதலாளித்துவ பீடைகள்

நாம் வாழும் இன்றைய ''காலனி சமுக அமைப்பின்'' சமூக சூழ் நிலைகளுக்கு அதன் சுற்றுச் சார்புகளுக்கு ஆளாக வேண்டிய துரதிஷ்டத்திலிருந்து நாம் தப்பிக்கொள்ள முடியாது. தோழர் லியு ஷோ-சி கூறுவதைப் போல், ''சமூகத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் கம்யூனிஸ்டுகள் வந்துள்ளார்கள். இவர்கள் சுரண்டல்காரர்களால் ஏற்படும் பலாபலன்களான சுய நலம், சதிவேலைகள், அதிகார வர்க்க மமதை, மற்றும் அருவருக்கத்தக்க பல்வேறு விஷயங்களையும் அபரிமிதமாகக் கொண்டுள்ளனர். இவர்கள் இந்த சமூகத்தில் வாழ்பவர்களாவர். சிறந்த கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலோர் இவற்றால் பாதிக்கப்படுவதில்லை. ஆயினும், சமூகத்தின் சீரழிந்த இவ் விஷயங்களை ஓரளவிற்கு கட்சிக்குள்ளே கொண்டுவருகின்ற, கட்சிக்குள்ளே பிரதிபலிக்கச் செய்கின்ற கட்சி உறுப்பினர்கள் இன்னமும் இருப்பதில் ஆச்சரியமில்லை.

''மேலும், தொழிலாளி வர்க்கம் சமூகத்தின் ஒரு பகுதி. நானாவித சமூகப் பகுதிகளுடனும் அது எண்ணற்ற வழிகளில் தொடர்பு கொண்டிருக்கிறது. நம் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதி. ஆகவே முதலாளித்துவ சமுகத்தின் பல்வேறு பகுதிகளுடைய தொடர்புகளிலிருந்தும் செல்வாக்கிலிருந்தும் நம் கட்சி தப்பமுடியாது. இத் தொடர்பு மூலம் பல நிர்ப்பந்தத்தின் விளைவாக முதலாளித்துவக் கருத்துக்களும், ஒழுக்கங்களும், பழக்க வழக்கங்களும், மனோபாவங்களும் தொழிலாளி வர்க்கத்திற்குள்ளும், அதன் கட்சிக்குள்ளும் பல சந்தர்ப்பங்களிலும் ஊடுருவிக் கொண்டு வந்துவிடுகின்றன.

''ஆகையினால், சமூகத்தில் இருள் நிறைந்த, பின் தங்கிய நிலைமைகளை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்துவது மட்டுமின்றி, கட்சிக்குள் சகல விதமான இருள் நிறைந்த பின் தங்கிய நிலைமைகளைப் பிரதிபலிக்கும், ஊசலாடும், நிலை தடுமாறும் அம்சங்களை எதிர்த்து உள் கட்சி போராட்டம் நடத்த வேண்டும். நமது உள் கட்சி முரண்பாடுகளுக்கும் உள் கட்சிப் போராட்டத்திற்கும் அடிப்படையாக விளங்குவது இதுவே யாகும்.''

தோழர் லியு ஷோ-சியின் மேற் கூறிய மார்க்சிஸ-லெனினிஸ விஞ்ஞானக் கண்ணோட்டத்தின் தீர்க்க தரிசனத்தின் மூலம் கடந்த காலங்களில் இலங்கைக் கம்யூனிஸ்டு கட்சியில் நடந்தவைகள் பற்றியும், திரிபுவாதக் கம்யூனிஸ்டுகளின் தவறான போக்கின் அடிப்படை என்ன என்பதைப் பற்றியும் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

### வாழ்க்கை சித்தாந்தம்

ஆகவே, கம்யூனிஸ்ட் கட்சிக் குள்ளே நடந்துவந்த சித்தாந்த மோதுதல்கள் மூலம் ஏற்பட்ட பிரதிபலன்களைப் பார்க்கும்போது, இங்கிலாந்து கல்விமான்களுக்கும், பாராளுமன்ற பகல் வேஷ தாரிகளுக்கும், பிரபுத்துவ குலப்பெருமை வாய்ந்த பிரசித்திப்பெற்ற மனிதர்களுக்கும் அவர்களது பகட்டான வேஷங்களுக்கும், மேடை முழக்கங்களுக்கும் சாதாரண கட்சி ஊழியர்கள் ஏமாறவில்லை என்பதை நேர்முகமாகவே அறியும்பொழுது மார்க்கிஸம்-லெனினிஸம் என்பது ஜீவ துடிப்புக்கொண்ட; மக்களுடைய, தொழிலாளி வர்க்கத்தினுடைய வாழ்க்கைச் சிந்தாந்தம் என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. இன்னுமொரு புறத்தில் கட்சிக்குள்ளே மறைந்திருந்த சந்தர்ப்ப வாதிகள், ஊசலாட்டக்காரர்கள், திருடர்கள், பதவிமோகப் பெருச்சாளிகள், பாராளுமன்றத்தையும், நகர சபையையும் கண்ணேக்காகக் கொண்டவர்கள், பணம் திரட்டி வியாபாரம் நடத்துவதற்கு, சுகபோக வாழ்வு நடத்துவதற்கு, குடிசை வாழ்வுக்குப் பதிலாக மாளிகை போகம் அனுபவிப்பதற்கென்றே திட்டமிட்டு கட்சியினுள் வந்தவர்கள், வகுப்புவாத கழிசடைகள் எல்லாம் புனிதமான மார்க்சிஸத்திற்கு முழுக்குப்போட்டுவிட்டு அதை ஒரு கடைச்சரக்காக விலைபேசி வயிறு வளர்த்து வருவதையும் நம்மால் நன்றாய் அறிய முடிந்தது. ஆனால் மிகவும் சொற்ப தொகையினர் தலைவர்களை பின்பற்றிச் சென்றார்கள். இவர்கள் இன்றைய அரசியல் நிலைமையைக் கண்டு பேரதிர்ச்சிக்கொண்டு செய்வதறியாமல் திண்டாடுகிறார்கள் என்பது உண்மைதில் தான். ஆனால் வெகு சீக்கிரத் இவர்களுக்கு அரசியல் தெளிவு ஏற்படும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

### சோஷலிஸம்

ஒரு காலத்தில் இந் நாட்டில் சோஷலிஸம், கம்யூனிசம் என்கிற வார்த்தைகளை எல்லாம் அரசியல் மேடைகளில் பேசியவர்கள் கம்யூனிஸ்டுகள் மாத்திரமே. அப்பொழுது கம்யூனிஸ்டுகளைப் பார்த்து கேலியும் கிண்டலும் செய்தவர்கள் இன்று சோஷலிஸம் பேசுவதற்கு முன்வந்துள்ளார்கள். எம்மைப் பொறுத்தவரையில் கொத்தலாவலையில் தொடங்கிய சோஷலிஸம் பண்டாரநாயக்காவுக்குப் பரிணமமாகி, கடைசியில் அது தொம்பே சோஷலிஸமாக விரிவடைந்து, சமீபத்தில் அது குருஷ்சேவின் பாஷையில் ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும், சி. பி. டி சில்வாவுக்கு மாக விரிவுற்றுக் கொண்டே செல்லுகிறது. இந்தப் பாதை இன்னும் தொடர்ந்தே செல்லும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

### புரட்டர்கள்

தேசிய ரீதியாகவும், சர்வதேசிய ரீதியாகவும் மார்க்சிஸத்தைத் தலைகீழாகக் கவிழ்த்துவிட்ட புரட்டுக்காரர்களான திரிபுவாதிகளின் செய்கைகளுக்குப் பிறகு சோஷலிஸம் என்ற பதம் வெறும் கேலிக்கிடமாகிவிட்டது. சோஷலிஸம் ஒரு நாட்டில் ஸ்தாபிதமாகுவதற்கு அடிப்படைத் தேவையான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் அதன் மூலம் முதலாளித்துவ உற்பத்தி விநியோக அமைப்பு முறைகளையும் தகர்த்தெறிந்துவிட்டு, அதன் பிறகு ஏற்படும் ஒரு புதிய அமைப்பில் நிலை நாட்டப்படும் சமூக அமைப்பில் தொழில் வளர்ச்சி உற்பத்தி, வினியோக முறைகளிலும், விவசாய அமைப்பு மாற்றத்திலுமே சோஷலிஸத்தை ஸ்தாபிக்க முடியும் என்கிற அடிப்படை சித்தாந்தத்தையே தொழிலாளி வர்க்க எண்ணத்திலிருந்து அடியோடு மறைத்துவிடுவதற்கு திரிபுவாதிகளும், ஏகாதிபத்தியவாதிகளும், தேசிய முதலாளிகளும் கூட்டாகச்சேர்ந்து முன்னணி அமைத்து செயல்படுகின்றனர். இந்த சர்வதேசிய, தேசியச் சதியை மிக மிகக் கவனமாக பரிசீலித்து வர வேண்டியது ஈழத்துப் பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும்.

### முடிவுப் படலம்

ஈழத் திரு நாட்டின் அரசியல் மேடையில் இலங்கை சமசமாஜக் கட்சியின் நாடக அரங்கேற்றம் ஆரம்பமானவுடனேயே நமது அரசியலிலும் ஒரு திருப்பம் ஏற்பட்டுவிட்டது. இந்த மகிழ்ச்சிகரமான செய்தியினூடே தான் நமது கட்சியின் 21-வது வயதும் ஆரம்பமாகிறது. சமசமாஜக் கட்சி இதுவரையிலும் இந் நாட்டில் போலித்தனமாக பேசி வந்த மார்க்சிஸ கொள்கைகளைப்பற்றி நாங்கள் மக்களுக்கு எடுத்துக்கூறியுள்ளோம். ஆனால், சமசமாஜக் கட்சியின் ''ஹெரால்ட் லாஸ்கி பொருளாதாரம்'' போலிப் புரட்சிகரப் பேச்சின் சீர்திருத்தவாதம், தொழிலாள வர்க்க சீர்குலைவுச் செயல், டிராட்ஸ்கிய சித்தாந்தம் போன்றவைகளின் நீண்ட கால துரோகப் படலத்தின் முடிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. ஈழத்து அரசியலின் குப்பை கூளங்கள் எல்லாம் ஒரு கரையில் சேர்ந்து ஒதுங்கி வருவதை வெகு சீக்கிரத்தில் நம்மால் காணமுடியும்.

—7-ம் பக்கம் பார்க்க

## புரட்சிக் கட்சி!

இருபத்தி யொருவயது ஆனால்நம்மை
இளைஞனெனச் சொல்லிடுவார் பின்புஇந்த
இருபத்து...மூபத்து...நாபத்தாகி...
இப்படியே ஒருபத்துக் கூடிப்போக
ஒருமித்துக் கூடியவர் கிழவன்என்புார்
ஒன்றுக்கும் இனியாகா தென்றும்சொல்வார்
ஒருசக்தி உலகத்தில் எங்குமுண்டு
இக்கதையோ அதன்வாழ்வுக் கொத்துப்போகா!

வயதாக வயதாக வைரம்பாய்ந்து
வளர்கின்ற சக்தியடா அந்தச்சக்தி
வயலெல்லாம் தொழிலாற்றும் ஆலையெல்லாம்
வளருதடா...! வளருதடா...! விம்மிப்பொங்கி
அயராது மூவேழு ஆண்டாயிங்கு
அழுவோர்க்குத் துணையாகி அவர்கள்வாழ்வை
உயர்வாக்க உழைக்கின்ற சக்திஈழப்
பொதுவுடமைக் கட்சியடா என்றும்வாழும்!

ஈழத்து முதலாளி தொழிலாளர்க்கு
இழைக்கின்ற துயரெல்லாம் உதைத்துத்தள்ள
களம்நோக்கித் தொழிலாளர் படையை வீரக்
கனலோடு செலுத்துங்கால் திரிபுவாதம்
விழல்வாதம் செய்தற்கு எழுந்தபோது
விறல்பெற்று அவ்வாத நோயர்தன்னை
அனல்மூட்டி அதற்குள்ளே அள்ளிப்போட்டு
அழித்தொழித்த சக்தியடா நமதுகட்சி!

புரட்சியெனும் தீவளர்த்துப் புரட்சிச்சொல்லால்
புரட்சியுளத் தோழரெலாம் புரட்சிபொங்க
புரட்சிப்பா பாடியதால் புரட்சியோங்க
புரட்சிநடை இட்டிங்கு புரட்சியாலே
புரட்சிமணம் வீசுதடா புரட்சிஈழம்
புரட்சியெனப் புறப்பட்டுப் புரட்சிகாணப்
புரட்சியிலே விளைவான புரட்சிக்கொள்கை
புரட்சிதரப் பொங்குதடா புரட்சிக்கட்சி!

-சுபத்திரா

# தென்னுபிரிக்க அரசின் காட்டுமிராண்டித்தனம்

# தேசாபிமானிகளுக்கு மரண தண்டனை

## இலங்கை ஆசிய-ஆபிரிக்க நட்புறவுச் சங்கத்தின் அறிக்கை

தென்னுபிரிக்க நிறவெறி அரசாங்கத்தின் கொடுமைகளைக் கண்டித்து, இலங்கை ஆசிய-ஆபிரிக்க நட்புறவுச் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் குரோசட் தம்பையா வெளியிட்டுள்ள அறிக்கையின் பூரண தமிழாக்கத்தை இங்கு தந்துள்ளோம்.

தென் ஆபிரிக்க சுதந்திரப் போராளிகளை எதிர்த்து தென் ஆபிரிக்க வேர்வூட் அரசாங்கம் அடக்குமுறை நடவடிக்கைகளைக் கூட்டியுள்ளது.

விசாரணையின்றியே பலரை அது சிறைக்குள் பூட்டுகின்றது. விசாரணை செய்யும் மற்றவர்கள் மீது தண்டனைகள் வழங்குகின்றது.

ஆபிரிக்க தேசிய காங்கிரசின் மூன்று முக்கிய உறுப்பினர்களாகிய வுயுசில் மினி, சிமாகிலி கபா, வில்சன் கயிங்கோ ஆகியவர்களுக்கு மரண தண்டனை அளித்துள்ளது முக்கிய உதாரணமாகும். ''நிவோனியா'' சதிவழக்கு என்று கூறப்படுவதில் நெல்சன் மண்டெலா, வார்டர் சிசுலு இன்னும் ஆறு தென்னுப்பிரிக்க தேசிய வாதிகளுக்கு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரசின் நோக்கங்களைப் பிரச்சாரம் செய்கின்றுர்கள் என்பதே இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு. இவ் விசாரணைகளின் நோக்கம், தென் ஆபிரிக்க ஆரசாங்கத்தின் நீதி மந்திரியினுல் உருவாக்கப்பட்ட அரசியல் குற்றங்களுக்காக ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அங்கத்தவர்களுக்கு மரணதண்டனை விதிக்கலாம் என்பதை மக்களுக்குப் பழக்கப்படுத்திக் கொள்வதேயாகும். இக் குற்றச்சாட்டுகளின் கீழ் சுற்றவாளி என நிரூபிக்கும் பொறுப்பு குற்றவாளிகளைச் சார்ந்ததாகும்.

நமது சுதந்திரத்தையும் வாழ்க்கையையும் பணயம் வைத்து தென்னுபிரிக்க தேசாபிமானிகள் எதிர்த்துப் போராடும் நிறவெறியை உலகம் முழுவதுமே கண்டித்துள்ளது. ஆனுல், 1962 நவம்பர் ஐக்கிய நாடுகள் சபை பொது அசெம்பிளி தீர்மானத்தையும், 1963 ஏப்ரல், ஆகஸ்டு பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களையும் மீறி தென் ஆபிரிக்க அரசு வெள்ளையரல்லாத மக்கள் மீது அடக்குமுறையைக் கூட்டியுள்ளது.

சென்ற வருடம் அடிஸ் அபாபாலில் நடைபெற்ற சுதந்திர ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் மாநாடு சில முக்கிய தீர்மானங்களை எடுத்தது. அத் தீர்மானங்களை அமுல் படுத்தியதால் தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் மீது சிறிய பாதிப்பை ஏற்படுத்தியது.

தென் ஆபிரிக்க அரசாங்கம் நிறவெறிக் கொள்கையைவிட நிர்ப்பந்திப்பதற்கு ஒரே வழி, பாதுகாப்புக் கவுன்சில் பொருளாதாரக் கட்டுப்பாட்டைத் திணிப்பதேயாகும். ஆனுல் அமெரிக்க, இங்கிலாந்து போன்ற ஏகாதிபத்திய நாடுகள் இதனைத் தடுக்கின்றன.

இலங்கை ஆசிய-ஆபிரிக்க நட்புறவுச் சங்கம் மனிதத் தன்மையற்ற நிறவெறிக் கொள்கையைக் கண்டிக்கின்றது. தென்-ஆபிரிக்க தேசாபிமானிகள் மீது அவர்களின் சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்து தென்-ஆபிரிக்க அரசாங்கம் நிறைவேற்றிய காட்டுமிராண்டித் தீர்ப்புக்களை அமுல் படுத்தாது தடுக்க எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளையும் ஆதரிக்கின்றது.

## இதுவே எங்கள் பெருமை

''கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தனி வார்ப்பு; தனித் தாதுக்களால் ஆக்கப்பட்டவர்கள்; உலகப் பாட்டாளி வர்க்கப் படையின் நேர் நிகரற்ற போர்த் தந்திரியான தோழர் லெனின் அணியில் அங்கத்தவர்கள். இந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதை விட, சிறந்த பெருமை எங்களுக்கு வேறெதுவும் இல்லை. தோழர் லெனினுல் அமைக்கப் பெற்று, அவரது தலைமையில் இயங்கிய கட்சியில் உறுப்பினர் என்பதை விட சிறந்த பெருமை வேறெதுவுமில்லை.''—லெனின் மறைந்த காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரால் தோழர் ஸ்டாலின் எடுத்த சபதம்.

### யாழ். பிரதேச வாலிபரின்

# ஆகஸ்ட் மாநாட்டுத் துயாரிப்புக் கூட்டங்கள்

| திகதி | வாலிபர் சங்கம் | கலந்துகொள்ளும் பிரதான தோழர்கள் |
|---|---|---|
| 4-7-64 | குருநகர் | வி. ஏ. கந்தசாமி, இ. குணரத்தினம். |
| | வட்டுக்கோட்டை | எஸ். இளங்கீரன், எஸ். இராசா. |
| 5-7-64 | நெடுந்தீவு | கே. ஏ. சுப்பிரமணியம், கா. நடராசா. |
| | சாவகச்சேரி | கே. டானியல், எஸ். இராசா. |
| | யாழ். நகரம் | வி. ஏ. கந்தசாமி, எஸ். மகாலிங்கம். |
| | மீசாலை, | கே. டானியல், எஸ். இராசதுரை. |
| 7-7-64 | வண்ணுர்பண்ணை | ஆர். பொன்னையா, எஸ். மகாலிங்கம். |
| | அராலி | வி. ஏ. கந்தசாமி, எஸ். இராசதுரை. |
| 8-7-64 | நீராவியடி | வி. ஏ. கந்தசாமி, கே. ஏ. சுப்பிரமணியம். |
| | அரியாலை | ஆர். பொன்னையா, கே. ஏ. சுப்பிரமணியம். |
| | கிளிநொச்சி | கே. டானியல், எஸ். இராசா. |
| 9-7-64 | புத்தூர் | ஆர். பொன்னையா, இ. கா. சூடாமணி. |
| | காரைநகர் | கே. ஏ. சுப்பிரமணியம், கா. நடராசா. |
| 10-7-64 | சுதுமலை | டபிள்யு. ஏ. தர்மதாஸா, கே. ஏ. சுப்பிரமணியம். |
| | பருத்தித்துறை | வி. ஏ. கந்தசாமி, எஸ். இராசா. |
| 11-7-64 | உரும்பராய் | வி. ஏ. கந்தசாமி, எஸ். இராசா. |
| | காங்கேசன்துறை | எஸ். மகாலிங்கம், இ. கா. சூடாமணி, |
| | சங்கானை | டபிள்யு. ஏ. தர்மதாஸா, கே. ஏ. சுப்பிரமணியம். |
| | சுளிபுரம் | டபிள்யு. ஏ. தர்மதாஸா, கே. ஏ. சுப்பிரமணியம். |
| | கரவெட்டி | எஸ். இளங்கீரன், எஸ். இராசா. |
| | நெல்லியடி | எஸ். இளங்கீரன், எஸ். இராசா. |
| 12-7-64 | உடுப்பிட்டி | வி. ஏ. கந்தசாமி, எஸ். இராசா. |
| | அல்வாய் | வி. ஏ. கந்தசசமி, எஸ். இராசா. |
| | மாதகல் | டபிள்யு. ஏ. தர்மதாஸா, கே. ஏ. சுப்பிரமணியம். |
| | கொட்டடி | எஸ். இளங்கீரன், எஸ். மகாலிங்கம். |
| 13-7-64 | பளை | வி. ஏ. கந்தசாமி, கே. ஏ. சுப்பிரமணியம். |
| | சுன்னுகம் | எஸ். இராசா, கா. நாடராசா. |

காரியதரிசித் தோழர்களின் கவனத்திற்கு

ஒவ்வொரு வாலிபர் சங்கமும் தங்களுக்கென கொடுக்கப்பட்ட திகதியில் கூட்டங்களை ஏற்பாடு செய்து கொள்வதுடன், கூட்டத்தில் பிரதானமாகக் கலந்துகொள்ளவிருக்கும் தோழர்களுக்கு கூட்டம் நடக்கும் இடத்தையும் நேரத்தையும் காரியதரிசி மூலமாகவோ அல்லது நேராகவோ உடனடியாகத் தெரியப்படுத்துங்கள்.

**கே. ஏ. சுப்பிரமணியம்**
செயலாளர்,
யாழ். பிரதேச வாலிபர் சம்மேளனம்.

### யாழ். பிரதேச மாணவர்கள்

# ஸ்தாபனரீதியாகத் திரண்டனர்

## 'இலவசக் கல்வி'யின் போலித் தன்மைக்கு கண்டனம்.

''இன்று சமுதாயத்தின் பல்வேறு பகுதிகளான விவசாயிகள், தொழிலாளர்கள், பொறியியல் வல்லுனர்கள், டாக்டர்கள் ஆகியோர் தங்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக அணிதிரண்டு போராடும் பொழுது, மாணவர்களாகிய நாம் எமது உரிமைகளுக்காகக் குரல் எழுப்பாமல் எங்கள் தலைவிதியை வேறு யாராவது நிர்ணயிக்கட்டும் என்று விட்டுவிட்டு நாம் மௌனமாக இருக்கமுடியாது'' என்று திரு ஜோர்ஜ் அவர்கள் யாழ் நகரசபை மண்டபத்தில் 24-6-64-ல் நடந்த மாணவ மாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசும்பொழுது குறிப்பிட்டார். மாநாட்டில் நூற்றுக் கணக்கான மாணவர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அமைப்புக் குழு காரியதரிசி திரு. யோகநாதன் அவர்கள் அறிக்கையை சமர்ப்பித்துப் பேசும் பொழுது, பொருளாதார அரசியல் கலாச்சார முன்னேற்றங்கள் அனைத்தும் மாணவர்களுடைய ஸ்தாபன அமைப்பு சிந்தனை ஆகியவற்றின் முன்னேற்றத்திலேயே தங்கியிருக்கின்றது என்று தெரிவித்தார்.

மேலும் திரு. யோகநாதன் பேசும் பொழுது, ''இலவசக் கல்வி என்ற தொடர் இன்று அர்த்தமற்றதாகிவிட்டது. ஏனென்றுல், பிரவேசக் கட்டணம், வசதிக் கட்டணம், உபகரணக் கட்டணம், விஞ்ஞான நூல் நிலையக் கட்டணங்கள் ஆகிய பலவிதமான கட்டணங்கள் மாணவர்களிடமிருந்து அறவிடப் படுகிறது. வறுமை நிலையில் உள்ள மாணவர்களையும் அவர்களுடைய பெற்ருேரையும் இத்தகைய கட்டணங்களை கொடுக்கும்படி நிர்ப்பந்திப்பது தவருன, கண்டிக்கப் படவேண்டிய செயலாகும். இலவசக் கல்வியென்று பேசிக்கொண்டு கட்டணங்களை வசூலிக்கும் இந்த வஞ்சகச் செயல் மாணவர்கள் உள்ளத்தில் இலகுவாகப் பதிந்துவிடும். கல்லூரியில் இச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பின்பு வேலையில்லாத் திண்டாட்டத்திஞல் விரக்தியடைகின்ருர்கள். சோஷலிஸத்தின் கீழ் எல்லோருக்கும் வேலையென்று கூறிக்கொண்டு, படித்த வாலிபருக்கு வேலை கொடுக்க மறுப்பது வஞ்சகம் நிறைந்த செயலாகும்'' என்ருர்.

மத்திய நிலையத்திலிருந்து வந்த பிரதிநிதி திரு கல்யானந்த அவர்கள் பேசும்போது, ''இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் உள்ள மாணவர்கள் அனைவரும் அணிதிரண்டு பலம் வாய்ந்த ஒரு சக்தியாக குரல் எழுப்பினுல் தான் எமது உரிமைகளைக் கொடுக்க அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க முடியும்'' என்ருர்.

திரு. எஸ். சரவணமுத்து மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். இம் மாநாட்டின் முடிவில் மாணவர்கள் ஒரு பிரமாண்ட ஊர்வலமாகச் சென்று வட-பிரதேச உப-வித்தியாதிகாரி அவர்களிடம் மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்களை சமர்ப்பித்தார்கள். முடிவில் தலைவராக திரு. பிரபாகசந்திரனும், செயலாளராக திரு. யோகநாதனும், பொருளாளராக கே. மகேந்திரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சகல கல்லூரிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய கமிட்டியொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# கம்யூனிஸ்ட் என்பவன் ய...

## மனிதகுலத்தை நேசிக்கும் மகோன்னத புருஷன்

**எதிர்காலத்தில் மனிதகுலம் மாண்புடன் இன்புற்று வாழும் பொருட்டு, கம்யூனிஸ்டுகள் தங்கள் உயிரையும் தியாகம் செய்கிறார்கள். நாளை மலரும் புது உலகைக் காணும் பாக்கியம் இல்லாதிருந்தும், உவப்புடன் தங்கள் இன்னுயிரை அர்ப்பணிக்கிறார்கள். ஏன்?**

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் வாழ்க்கையை நேசிக்கிறோம். எனவேதான், மகிழ்ச்சியும் நிறைவும் சுதந்திரமும் கூடிய இலட்சிய வாழ்வுக்கான பாதையை அமைக்கும் பொழுது, குறுக்கிடும் தடைகளைத் தகர்த்தெறிவதில், எங்கள் உயிரையும் தியாகம் செய்ய எந்நேரத்திலும் நாங்கள் தயங்குவதில்லை. அடிமைத்தனம், சுரண்டல் என்னும் சங்கிலிகளால் பிணைக்கப்பெற்று, முழந்தாளிட்டு வாழ்தல் வாழ்க்கை ஆகாது. தாவரங்களைப் போல் வாழ்வது வாழ்க்கை அல்ல. அது மனிதன் என்ற பெயருக்கே அவமானமாகும். இந்த அவல வாழ்வில் ஒரு கம்யூனிஸ்டு, ஒரு உண்மையான மனிதன் திருப்தி அடைய அவனுக்கு உரிமை இருக்கிறதா? சுரண்டலுக்கும் அடிமைத்தனத்திற்கும் அடிபணிய அவனுக்கு உரிமை இருக்கிறதா? இல்லை. ஒரு போதும் இல்லை. எனவேதான், கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் உண்மையான வாழ்வுக்காக, மனிதத் தன்மையேடு கூடிய வாழ்வுக்காக நடைபெறும் போராட்டத்தில் எத்தகைய தியாகத்தையும் செய்யப் பின் வாங்குவதில்லை.

### மனிதனை நேசிப்பவன்

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் மனிதனை நேசிக்கிறோம். மனிதத் தன்மையுள்ள எதுவும் எங்களுக்குப் புறம்பானதல்ல. மிகச் சாதாரண மனித இன்பங்களின் மதிப்பையும் நாங்கள் அறிவோம். அவற்றிலும் நாங்கள் மகிழ்ச்சி காண முடியும். எனவேதான், மனிதன் உழைப்பை மனிதன் பறிக்கும் அராஜக அமைப்பின் கொடுமைகளிலிருந்து, அதாவது, பயங்கரப் போரின் துன்ப துயரங்கள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய கொடுமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, மகிழ்ச்சியும் நிறைவும், ஆரோக்கியமும் சுதந்திரமும் உள்ள மனிதனுக்கு, இந்தப் பரந்த உலகில் ஒரு இடம் அளிப்பதற்காக, எங்கள் சுகபோகங்களைத் தியாகம் செய்ய நாங்கள் ஒரு போதும் தயங்குவதில்லை. லாபம், லாபம், மீண்டும் லாபம்! இதையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு அமைப்பு, மக்களுக்கிடையே நேச உறவு நிலவுவதற்குப் பதிலாக, பண உறவையே அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பு, மனிதனைக் காட்டிலும் பணத்திற்கே அதிக மதிப்பைத் தருகிற ஒரு அமைப்பு மனிதத் தன்மை அற்றதாகும். மனிதனை நேசிக்கிற ஒரு மனிதனுக்கு, ஒரு கம்யூனிஸ்டுக்கு, மக்களின் மனிதத் தன்மை பறிக்கப்படுகிற பொழுது, சும்மா இருக்க உரிமை உண்டா? இல்லை, எனவேதான், நிறைவும் சுதந்திரமும் பண்பும் பொருந்திய மனிதனுக்காகப் போராடுவதில், தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் பின் வாங்குவதில்லை.

### விடுதலை போராளி

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சுதந்திரத்தை விரும்புகிறோம். எனவேதான், உண்மையான சுதந்திரத்தை, விரிவான சுதந்திரத்தை, சுதந்திரம் என்ற வார்த்தைக்கு உரிய இலட்சணத்தோடு கூடிய சுதந்திரத்தை, மனிதகுலம் முழுமையும் பெறுவதற்காக எங்கள் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு, தோழர் லெனின் படையின் கட்டுப்பாட்டுக்கு, இஷ்டபூர்வமாகப் பணிவதற்கு நாங்கள் ஒரு விநாடியும் தயங்குவதில்லை. ஒரு சிலருக்கு மட்டும் சுதந்திரம்—கொள்ளையடிக்க ஒரு தரத்தாருக்குச் சுதந்திரம்; மற்றவர்களுக்குப் பட்டினியால் மடிய சுதந்திரம். இவை சுதந்திரம் அல்ல; அடிமைத்தனம். இந்த நிலைமைகளைக் கண்ட பிறகும் வாளா இருக்க ஒரு கம்யூனிஸ்டுக்கு உரிமை உண்டா? சில தனிநபர்களுக்கு இதயகீதமாக விளங்கும் அத்தகைய சுதந்திரத்தால் திருப்தி அடைய அவனுக்கு உரிமை இருக்கிறதா? இல்லை; ஒரு போதும் இல்லை. எனவேதான் உண்மையான சுதந்திரத்திற்காக, விரிவான சுதந்திரத்திற்காக, எல்லோருடைய சுதந்திரத்திற்காகப் போராடுவதில் தங்களுடைய முழு வலிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.



கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஆக்கவேலையை நேசிக்கிறோம். எதிர்கால மனிதகுலத்தை உருவாக்கும் நிர்மாண வளர்ச்சியை நேசிக்கிறோம். எனவேதான், மனிதனின் மகத்தான சிருஷ்டி சக்திகளுக்குக் குறுக்கே நிற்பவற்றை, அவற்றை மட்டும்தான், தகர்த்தெறிய ஒரு விநாடியும் தயங்குவதில்லை.

### தியாக சீலன்

ஆயிரம், பல்லாயிரக் கணக்கான திறமையுடைய மனிதர்கள், மனித கலாச்சாரத்தைப் பல மடங்கு பெருக்கியிருக்க முடியும்; மனித ஸ்தானத்தைச் சீர்திருத்தியிருக்க முடியும்; மனிதனின் தொழில் நுட்ப சாதனைகளை, கற்பனைக்கு எட்டாத அளவுக்கு உயர்த்தியிருக்க முடியும். அத்தகைய திறமைகள் இன்று பாழ்பட்டுக் கிடக்கின்றன. மனித குலத்துக்குத் தேவையுள்ள அனைத்தையும் ஏராளமாக அளிக்கும் திறமையும் வலிமையும் படைத்த ஆயிரம் ஆயிரம் கரங்கள், இன்று வேலையின்றிச் சோம்பிக் கிடக்கின்றன. அடிக்கடி நிகழ்கின்ற நெருக்கடியான காலங்களில், அத்தகைய கரங்கள் சோம்பிக் கிடக்கும்படி நிர்ப்பந்திக்கப் படுகின்றன. இதனால் மனித சமுதாயத்திற்கு நேரிடுகின்ற பயங்கர நஷ்டத்தைத் தடுக்காமலிருக்க ஒரு கம்யூனிஸ்டுக்கு உரிமை உண்டா? இல்லை. எனவேதான், மனிதகுல சிருஷ்டி சக்திகள் அனைத்தையும், ஒவ்வொரு மனிதனின் சிருஷ்டி சக்தி முழுமையும் பயன்படுத்தி, முழு வளர்ச்சி அடையும்படி செய்யும் ஒரு அமைப்பைப் பெறுவதற்கான போராட்டத்தில், தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ, கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

### சமாதான வீரன்

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சமாதானத்தை நேசிக்கிறோம். எனவே தான், நாங்கள் போராடுகிறோம். போர் மூள்வதற்கான சூழ்நிலைகள் அனைத்தையும் நாங்கள் எதிர்த்துப் போராடுகிறோம். சில தனி நபர்களின் சொந்த நலன்களுக்காக நடைபெறும் பயங்கரப் போரில், கோடிக் கணக்கான மக்கள் மாண்டு மடிவதற்கும், மனித வாழ்வுக்கு அவசியமான செல்வங்களை அழிப்பதற்கும் காரணமாகும், ஒரு குற்றவாளிகூட இல்லாத உலக அமைப்புக்காக நாங்கள் போராடுகிறோம். ஒருவாய்ச் சோற்றுக்காக, மனிதனை எதிர்த்து மனிதன் சண்டைபோடவேண்டிய நிலைமை எங்கேஇருக்கிறதோ. அங்கே சமாதானம் இல்லை. இருக்கவும் முடியாது. எனவேதான், உண்மையான சமாதானத்திற்காக, இறுதிச் சமாதானத்திற்காக, மனித சமுதாயத்தின் புதிய ஸ்தாபனத்தால் உத்தரவாதம் செய்யப்படும் சமாதானத்திற்காகப் போராடுவதில், தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

### விடுதலை நாயகன்

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எங்கள் நாட்டை நேசிக்கிறோம். ஏனென்றால், ஒரு நாடுகூட அடக்கி ஒடுக்கப்பட்டாலும், மனிதனின் ஆக்க சக்திகள் அனைத்தும் சுயேச்சையாக வளர்ச்சி அடைய முடியாது. இறுதியான சமாதானத்திற்கு உத்தரவாதம் இருக்காது. ஒரு நாடு மற்றொரு நாட்டை அடக்கி ஆண்டால் உண்மையான சுதந்திரம் இருக்க முடியாது. நமது மாபெரும் லட்சியங்களை நாட்டின் ஜீவித அமைப்புக்குள்ளேயே அடைய விரும்புகிறோமே தவிர, அதற்கு அப்பாற்பட்டல்ல. இல்லா விட்டால், அவை யதார்த்தமாக முடியாது. உண்மையான புதல்வர்களின் நேசத்தோடு நாங்கள் தாய்நாட்டை நேசிக்கிறோம். எனவேதான், மனிதகுல மேன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் எங்கள் நாடு வழங்கிய, இன்றும் வழங்குகிற எல்லாக் காரியங்களுக்காகவும், அதனால் அதன் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் உதவியாகவுள்ள அனைத்திற்காகவும், நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். எங்கள் நாட்டை இழிவுபடுத்துகிற, கொள்ளையிட விரும்புகிற, அதன் இரத்தத்தை உறிஞ்சுகிற, அதைப் பலவீனப்படுத்துகிற அனைத்தையும் நாங்கள் அழித்துவிட விரும்புகிறோம். எனவேதான், உலகில் சுதந்திரம் பெற்ற சமத்துவ நாடுகளின் மத்தியில், சம அந்தஸ்தோடு சுயேச்சையாக வாழும் பொருட்டு, எங்கள் நாட்டின் பரிபூரண விடுதலைக்கான போராட்டத்தில், எங்கள் முழு வலிமையை ஈடுபடுத்தவோ சர்வ பரித்தியாகம் செய்யவோ நாங்கள் தயங்குவதில்லை.

தியாகச் சுடர்

**ஜூலியஸ் பூசிக்**

நாங்கள் நிறைவேற்றவேண்டிய வேலைகள் மகத்தானவை.

### லெனின் பட்டாளத்தினர்

மகிமை வாய்ந்த உலகப் பாட்டாளி வர்க்க போர்த்தந்திர நிபுணரின் பட்டாளத்தை, தோழர் லெனின் பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், இப்பொறுப்புக்களை நிறைவேற்ற நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த பட்டாளத்தின் ஒற்றுமையையும் தூய்மையையும், கம்யூனிஸ்டுக் கட்சியின் ஒற்றுமையையும் புனிதத் தன்மைமையும், கண்ணின் கருமணியைப் போன்று பாதுகாப்பது; மனித குலத்தில் சிறந்தவர்களையும், நாட்டின் சிறந்த சக்திகளையும் மேலும் மேலும் ஒன்று திரட்டுவது; எங்கள் கூட்டாளிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பது; வரலாற்றின் வளர்ச்சி எதை நோக்கிச் செல்லுகிறது? தங்களின் ஜீவாதார நலன்களுக்காக அது மக்களிடம் வேண்டி நிற்பது என்ன? என்பவற்றை அவர்களுக்கு இடைவிடாது உணர்த்தி, மக்களுடன் ஒன்று கலந்து சலிப்பின்றி, பொறுமையோடு அவர்களுக்கு வழி காட்டுவது; அதாவது, உண்மையான உணர்வு, தைரியம், கருத்தில் உறுதி, தியாகம், சஞ்சலம் இன்மை ஆகிய சிறந்த மனிதப் பண்புக்கு இருப்பிடமாக விளங்குவது: இவையே நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகும்.

### தோழர்களே!

கம்யூனிஸ்டு தோழர்களே! இது உங்களுக்குப் பொருந்தும். ஏனென்றால், நீங்கள் லெனின் படையைச் சேர்ந்தவர்கள். நீங்கள் எந்தப் பகுதியில் வேலை செய்துகொண்டிருப்பினும், நீங்கள் மனித குலத்தின் விடுதலைக்காக, புரட்சியின் எந்த அரணில் போராடிக்கொண்டிருப்பினும் தன்னந்தனியாகக் கடமையைச் செய்துகொண்டிருப்பினும், கொடியவர்களால் இருண்ட சிறைகளில் பூட்டப்பட்டிருப்பினும், ஒவ்வொரு நாளும் உங்கள் செயல்களை, எண்ணங்களை விமர்சனம் செய்யுங்கள்; மாபெரும் லெனின் பட்டாளத்தில் ஒரு வீரனாக இருக்க நான் தகுதி உள்ளவனா? தோழர் ஸ்டாலின் என் பெயராலும், எடுத்துக் கொண்ட சபதத்தை விசுவாசத்துடன் மரியாதை செய்யத் திறமை உள்ளவனா? வரலாறு நம்மீது சுமத்துகின்ற எதிர்காலக் கடமைகளை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு நான் வளர்ச்சி அடைந்திருக்கிறேனா? இவையே விமர்சனம் செய்யப்படவேண்டியவை.

எங்களிடம் அனுதாபம் உள்ள நண்பர்களே! அது உங்களுக்குப் பொருந்தும். போராடுகின்ற மக்கள் அணியில் நீங்கள் எங்கு நின்றாலும், எந்தப் பகுதியில் இருந்தாலும், உங்கள் அனுதாபத்தைச் செயலில் காட்டுவது எப்படி? கட்சியோடு நெருங்கிய தொடர்பு கொள்வது எப்படி? என்பனவற்றைப் பற்றி அடிக்கடி சிந்தியுங்கள். அவ்வாறு சிந்திப்பதனால், கட்சியின் அணிவகுப்பு முன்னேறிச் செல்லும்பொழுது அதனுடன் சேர்ந்து நீங்கள் முதப்புகள் ஆ...

...னேற முடி...
...களுக்கு வ...
...ந்து, கொ...
...நீத்த தி...
...லாக, நீங்...
...யில் இடம்...

### எங்கள்...

சமீப கா... பற்றி அறி... களுக்கும், சந்தேகத்... தவர்களுக்... நாசகாரக் ... தில் ஒன்று... க்கும் இது ... கள் மிக உ... கவனித்து ... கள் செயல்... னிக்கிறீர்க... நுட்பமாகக்... எங்களுடை... வாழ்க்கை... எங்களுடை... செயலையும் ... யுங்கள், வி... களுக்குத்... வேண்டியது ... களுக்குத் ... மறைக்கவே... ன்றும் எங்க... களுக்கு முன்... களுக்கு முன்... விடுதலைப் ... மிகக் கடுமை... பரீட்சையில் ... யிருக்கிறோம் ... போரில் பு... ளோம் என்... றில் தவறி... களின் நேர்... கூட சொ... டான். கூர்... காரணத்தை ... கின் பெரும் ... குப் புரிந்து... ங்கி இருப்ப... புக்கொள்வீர்... தலம் சுதந்தி... தானமாகவு... வும் வாழ்வ... கடைப்பிடிக்... தவிர வேறு ... எங்களுடன் ... தனக்கு வி... றன் என்ப... உணர்வீர்கள்...

(''எங்கள் ... நேசிக்கிறோம்'' ... லிருந்து).

கம்...

★ ...
★ ...
★ ...

அர...
பொருள...
பற்...

சொற்பொ...

...பாருள்:

பொருளாதா... நெருக்கடிகள்... காரணம்

ஏகாதிபத்திய... ஏகபோகத்தில்... வளர்ச்சி

சோஷலிஸப் ... பொருளாதார...

* * * * * * * * * * * * * * *

# வென்று பொசுக்கி மேதினி வாழ்வோம்

**எஸ். சதாசிவம்**

காலையானதும் களிமனை விட்டு
வேலை செய்ய வேண்டுமேயென்று
சாலை நோக்கித் தவியாய்ச் சென்று
மாலை வருவான்; மயங்கித் தவிப்பான்.

பாடு பட்டு உழைத்தவன்தான்
கேடு கெட்ட உறிஞ்சலர்களால்
வீடு வாழ ஊதியம் பெற்றிலன்!
பாடு பட்டும் பட்டினி போக்கிலன்

உழைத்து உழைத்து இளைத்தவனே!
சளைத்தோம் பொறுத்தோம்; முடியாது
முளைத்துக் கொழுத்த முதலாளியை
களையாய்ப் பிடுங்கிக் கவிழ்ப்போம் பாரில்

ஒன்று சேருங்கள் ஓரணி திரண்டு
அன்று மார்க்ஸ்? அவ்வழி நின்று
தின்று கொழுத்த தீய கூட்டத்தை
வென்று பொசுக்கி மேதினி வாழ்வோம்.

* * * * * * * * * * * * * * *

# ...ன் யார்?

## ...ம்

னேற முடியும். அதனுல் உங்களுக்கு வழிகாட்டியாக இருந்து, கொடிய போரில் உயிர் நீத்த தியாகிகளுக்குப் பதிலாக, நீங்களே கட்சி அணியில் இடம் பெறுவீர்கள்.

### எங்கள் வழி

சமீப காலம்வரை எங்களைப் பற்றி அறிந்துகொள்ளாதவர்களுக்கும், எங்கள் கட்சியைச் சந்தேகத்துடன் பார்த்துவந்தவர்களுக்கும், ஹிட்லரின் நாசகாரக் கும்பலை எதிர்ப்பதில் ஒன்றுபட்டு நின்றவர்களுக்கும் இது பொருந்தும். நீங்கள் மிக உன்னிப்பாக எங்களை கவனித்து வருகிறீர்கள்; எங்கள் செயல்களைக் கூர்ந்து கவனிக்கிறீர்கள். ஆம், வெகு நுட்பமாகக் கவனியுங்கள். எங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் பாருங்கள். எங்களுடைய ஒவ்வொரு செயலையும் அலசி அலசி ஆராயுங்கள், விமர்சியுங்கள், உங்களுக்குத்தெரியாமல் மறைக்க வேண்டியது ஒன்றுமில்லை. மக்களுக்குத் தெரியாமல் மூடி மறைக்கவேண்டியது யாதொன்றும் எங்களுக்கு இல்லை. உங்களுக்கு முன்னுல், நாட்டு மக்களுக்கு முன்னுல், நாட்டின் விடுதலைப் போராட்டத்தில், மிகக் கடுமையான அக்கினிப் பரீட்சையில் நாங்கள் இறங்கியிருக்கிறோம். நாங்கள் போரில் புறமுதுகு காட்டினேம் என்ரே, ஏதோ ஒன்றில் தவறினேம் என்ரே, எங்களின் நேர்மையற்ற விரோதி கூட சொல்லத் துணியமாட்டான். கூர்ந்து கவனியுங்கள். காரணத்தை அறிவீர்கள். உலகின் பெரும் பகுதி இன்றைக்குப் புரிந்துகொள்ளத் தொடங்கி இருப்பதை, நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். மனித குலம் சுதந்திரமாகவும் சமாதானமாகவும், ஆனந்தமாகவும் வாழ்வதற்கு நாங்கள் கடைப்பிடிக்கும் வழியைத் தவிர வேறு வழியே இல்லை, எங்களுடன் வராத ஒருவன், தனக்கு விரோதமாகப் போகிறுன் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

(''எங்கள் நாட்டை நாங்கள் நேசிக்கிரேம்'' என்ற நூலிலிருந்து).

முற்போக்கு இலக்கியம்

# கனல் பறக்கும் இதயம் வேண்டும்

## எழுத்துலக சிற்பிகளுக்கு மார்க்ஸிம் கார்க்கி அறிவுரை

[''இலக்கியம் ஆத்மாவை திருப்திப் படுத்துவதற்கல்ல; அதைத் தட்டி எழுப்புவதற்கு'' என்ற தாரக மந்திரத்தை உச்சாடனம் செய்து, அதை நடைமுறையில் செயல்படுத்திய சோஷலிஸஇலக்கியத்தின்பிதாமகன் மார்க்ஸிம் கார்க்கி, எழுத்தாளர்களுக்குதந்த சில அறிவுரைகளை இங்கு திரட்டி தந்துள்ளோம்.]

கார்க்கி தனது முதல் கவிதையை, முதல் எழுத்துப் படைப்பை என்றுகூடச் சொல்லலாம், உருவாக்கியது மிகவும் வேடிக்கையான விஷயமாகும். அந்தச் சமயம் அவர் கஸான் ரெயில் நிலையத்தில் காவல்காரன் வேலை பார்த்து வந்தார். இவரது அறைக்குப் பக்கத்தில் ரெயில்வே தொழிலாளர்களுக்கான சமயலறை இருந்தது. இதில் தடித்த பெண்ணெருத்தி சமயற்காரியாக வேலை பார்த்து வந்தாள். வாலிப மிடுக்கும், உடற்கட்டு மிக்க கார்க்கியை இரவு பூராவும் அவள் தொந்தரவு செய்வதையே தனது தொழிலாகக் கொண்டாள். அவளுடைய பெருந் தொல்லையைப்பற்றி கார்க்கி சாதாரண தொழிலாளர்கள் தொட்டு ஸ்டேஷனில் தலைமை அதிகாரி வரையும் சொல்லிப் பார்த்தார். ஆனுல் துரதிருஷ்டவசமாக, காவல்காரனுக இருந்த கார்க்கியின் 'அபயக் குரல்' யார் காதிலுமே ஏறவில்லை. சமையல்காரியின் நச்சரிப்பும் ஓயாமல் இருந்தது. என்ன செய்வதென்றே தோன்ருமல் தடுமாறிக் கொண்டிருந்த கார்க்கிக்கு ஒரு நாள் ஒரு அபூர்வ யோசனை உதித்தது. உடனே கவிதையொன்று புனைவதில் ஈடுபட்டார். பல தினங்கள் ஓயாமல் ஒழியாமல் கவிதை புனைந்தார். சமையல்காரியைப்பற்றி முதலில் வர்ணித்துவிட்டு அவளின் கையில் சிக்கி, ஒவ்வொரு இரவும் தான் படும் 'நரக வேதனையை' நகைச்சுவை ததும்ப அந்தக் கவிதையில் ரெயில்வே தலைமைக் காரியாலயத்து முதல் அதிகாரியின் கவனத்தைக் கவரும்படி சித்திரித்தார். இதுதான் கார்க்கியின் முதற் கவிதை. கார்க்கியின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டிய கவிதை. இந்தக் கவிதை பிறந்த 20 தினங்களில் கார்க்கிக்கு பொரிஸோக் லேப்ஸ்க் பட்டிணத்திற்கு மாறிச் செல்ல உத்தரவு கிடைத்தது. அந்த நாட்களில், ஒரு வேலை ஸ்தலத்தை விட்டும் மற்றெரு வேலை ஸ்தலத்திற்கோ பட்டிணத்திற்கோ மாறிச் செல்லக் கோரி அனுமதி பெறுவது 'சுவர்க்க லோகத்திற்கே' சென்று திரும்பும் அசகாய சாதனையாகக் கருதப்பட்டதை, வாலிப கார்க்கி வெற்றிகரமாக செய்துமுடித்தது, கஸான் ரெயில்வே தொழிலாளர், குமாஸ்தாக்கள் உட்பட மேலதிகாரிகளுக்கும்கூட புதிராகவே இருந்ததாம். கவிதையின் மகத்துவத்தை அன்றுதான் கார்க்கியால் மதிப்பிட முடிந்தது. கார்க்கியின் கவிதை பல தினங்கள் ரெயில்வே தலைமைக் காரியாலயத்தில் எல்லோர் மத்தியிலும் தொடர்ச்சியான சிரிப்புக்கும், தமாஷுக்கும் வழிகோலி இருந்ததெனின் கார்க்கியின் அந்த முதற் கவிதையின் சிறப்பைப்பற்றி அதிகம் ஒன்றுமே கூறத் தேவையில்லையென நினைக்கிறேன்.

★

### சொற்களை சீராக்கு

ஒரு தடவை, ருஷ்ய நாட்டின் 20-ம் நூற்றுண்டுப் பெரும் புலவன் என்று புரட்சிக்குமுன் முதலாளித்துவ விமர்சகர்களால் பாராட்டப்பட்ட சாலியாபினது சிறப்பு விழா மாஸ்கோவில் கொண்டாடப்பட்டது. அந்த விழாவுக்கு கார்க்கியும் அழைக்கப்பட்டிருந்தார். விழாவில் முழுக்க பெரும் வர்த்தகர்களும், பிரபுக்களும் ஜாரின் வாரிசுகளும் கலந்துகொண்டிருந்தனர். சாலியாபினைப் பற்றி எல்லோரும் வானளாவப் புகழ்ந்தனர். முடிவில் கார்க்கிக்கு பேச வாய்ப்பு கிடைத்தது. கார்க்கி தனது பேச்சில் அஞ்சா நெஞ்சத்துடன், அழுத்தம் திருத்தமாக மேஜையில் ஆஜானுபாவனுக வீற்றிருந்த சாலியாபினைப் பார்த்துச் சொன்னுர்: ''சாலியாபின், நீர் ஒரு சிறந்த அறிவாளி! ஆனுல் உமது அறிவின் திறனெல்லாம், கவிதைமேதாவிலாசமெல்லாம் சொகுசு வர்க்கத்தினரான வர்த்தகர்களின் அருமை மனைவிகளின் பட்டாடையிலும் பகட்டுத் தோற்றத்திலும் ஆழ்ந்து அமிழ்ந்து, பாலைவனத்தில் இறைத்த நீராகிவிடுகிறது. அன்பனே, உனது கண்களை இனிமேலாவது திறந்து பார். அனுதரவற்று, அடிமைப் பட்டுத் தவிக்கும் ஆத்மாக்களுக்குக் ஜீவத் துடிப்பளிக்க உனது சொற்களைச் சீராக்கு. அன்றுதான் உண்மையாகவே மாபெரும் கவிஞனுவாய்.''

★

### உழைப்புதான் ஜீவசக்தி

கார்க்கிக்கு எப்போதும் மிகச் சிறிய பொருள்களில் தான் அதிக ஆசை இருந்தது. சிறிய சிற்ப வேலைகளை அவர் பல நாடுகளிலிருந்தும் பெருந்தொகைப் பணம் அனுப்பிப் பெற்று, தனது படுக்கை அறையில் வைத்திருந்தார். நான்கு மாத உழைப்பில் உருவான ஒரு சிறிய தந்தத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒரு மரச் சிற்பத்தை சீனத்திலிருந்து பெருந் தொகைப் பணம் கொடுத்து வாங்கினுர். அதை அடிக்கடி அவர் பார்த்து ரசிப்பார். உழைப்பின் பெருமையை கார்க்கி அதில் நேரடியாகவே கண்டார். அதை மேலும் தனது கலைக் கண்களைக் கொண்டு ஊடுருவிப் பார்த்து அவர் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தார். அந்தச் சீனத்துச் சிற்பத்தை அவர் பார்த்து ரசிக்கும்போதெல்லாம் சொல்லிக்கொள்வார்: ''சோவியத் நாட்டில் சிறந்த மனிதனை, புதிய மனிதனை வளர்த்தெடுக்க-வார்த்தெடுக்க வேண்டுமாயின், சோவியத் இலக்கியம் உயிர் துள்ளும் உழைப்பின் சித்திரங்களை ஆயிரமாயிரமாகத் தோற்றுவிக்க வேண்டும்'' என்று. உலகின் ஓட்டத்திற்கு உழைப்புதான் ஜீவசக்தி என்ற அபிப்பிராயத்தில் கார்க்கி ஊறித்திளைத்திருந்தார்.

★

### உழைப்புக்கு பாராட்டு

சில பிரெஞ்சு எழுத்தாளர்களுக்கு கார்க்கி இந்தக் கருத்தை அழகுற வெளியிட்டார். கலாச்சாரத்திற்கும் உழைப்புக்குமிடையே நிலவிய பிரிக்க முடியாத சம்பந்தத்தைப் பொறுத்தமட்டில் அவர் கொண்டிருந்த அபிப்பிராயம் அழுத்தமாகவே அதில் தொனித்தது. ''கலாச்சாரம் ஒரு சிருஷ்டி. உழைப்புதான் இன்றும், நாளையும் அதன் அஸ்திவாரம். மனித ஜாதி இவ்வுலகில் எப்படி உழைத்தது; தனது உழைப்புச் சக்தியை உலகின் வளர்ச்சிக்கு எப்படிப் பயன்படுத்தியது என்பதைக் கூறும் கதை, சகல கதைகளையும்விட பேரதிசயமான கதையாகும்'' என்று. இதன் மூலம் கார்க்கி உழைப்பின் பெருமைக்கு வாழ்த்துப் பாடினுர்.

கலாச்சாரத்தின் சிருஷ்டிகர்த்தாக்களும், உலகிலுள்ள சகல செல்வங்களையும் உண்டாக்குவோரும் மக்களேதான் என்ற உண்மையை கார்க்கி நன்கு உணர்ந்திருந்தார். உழைப்பாளி மக்களின் வாழ்க்கையிலிருந்தும், அவர்களுடைய போராட்டத்திலிருந்து பணச்சர்ற பல நூற்றுண்டுகளில் அவர்கள் தங்களின் உழைப்பின் மூலம் சிருஷ்டித்து உருவாக்கிய போற்றற்கரிய பல்வேறு சிறப்புகளிலிருந்தும்தான் அவர் தன் உணர்வையும், உற்சாகத்தையும், தமது மொழிகளையும், உருவங்களையும், கற்பிதங்களையும் பெற்றவராகத் திகழ்ந்தார்.

★

### வாலிப எழுத்தாளனுக்கு

[அலெக்ஸாண்டர் சேரம்னே என்ற இளம் எழுத்தாளர் ஒருவருக்கு கார்க்கியினுல் எழுதப்பட்டது.]

அன்புள்ள நண்பரே,

''உங்களுடைய கவிதை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இவ்வளவு காரசாரமாகவும், உயிர்த்துடிப்புடனும், சீரிய கவிதை மொழியிலே இதை நீங்கள் எழுதியிருப்பது கண்டு நான் மகிழ்கிறேன்.

''உங்கள் ஆற்றலும் உங்கள் ஊழியத் துறையிலே உங்களுக்குள்ள நம்பிக்கையும் மேலும் பெருகவேண்டுமென மனப்பூர்வமாய், இதயத்தின் அடித்தளத்திலிருந்து வாழ்த்துகிறேன்.

''உங்களுடன் ஒப்பிடும்போது வயது முதிர்ந்தவனுகிய நான் நல்லதொரு புத்திமதியை உங்களுக்கு எடுத்துரைக்கத் துணிகிறேன். எந்த நேரத்திலும் அயராது உழைத்து உங்கள் ஆயுதத்தைக் கூர்மையாகத் தீட்டி வைத்துக் கொள்ளுங்கள். வற்றுத ஊற்றுப்போன்ற மக்களது செழுமிய, எழில் மிகுந்த, இன்சுவை மொழியை தொடர்ந்து பயிலுங்கள்! இம்மொழியிலிருந்து நீங்கள் மேதையின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் கைகூட வல்ல கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் எடுத்துரைக்கும் வல்லமையைப் பெறமுடியும். எந்தச் சிறிய விஷயத்தையும் கவனியாது விட்டுவிடாதீர்கள். எதைப் பற்றியும் அஞ்சாதீர்கள். அனைத்தையும் துருவி ஆராயுங்கள். அரிய பலவற்றை-எல்லோருக்கும் பயன்படக் கூடியவற்றை, உங்களால் தொடர்ந்து கண்டறிய முடியுமென நான் திடமாகக் கூறுவேன்...''

கார்க்கி தனக்குப் பின்னுல், ஒரு பரம்பரையையே உருவாக்க இப்படிப்பட்ட சிநேக பூர்வமான விமர்சனங்கள் தான் மிக முக்கிய காரணமாக இருந்தன. தன்னை வந்து காணும் இளம் எழுத்தாளர்கள் அனைவருக்கும் கார்க்கி ஒரு பொன் மொழியை பொதுவாகச் சொல்வது வழக்கம்...... ''அன்பர்களே, கவிஞர்களாகவும், நாவலாசிரியர்களாகவும், எழுத்தாளர்களாகவும் சிறந்து விளங்க வேண்டுமா? அந்த ஆர்வத்தில் நீங்கள் கட்டுண்டிருக்கிறீர்களா? அப்படியானுல், கனல் பறக்கும் இதயத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள்'' என்று கூறுவார்.

—6-ம் பக்கம் பார்க்க

# கம்யூனிஸம்

★ புரட்சி வீரன்

★ சுதந்திரப் போராளி

★ தியாக சீலன்

★ சமாதான வீரன்

★ விடுதலை நாயகன்

# இலங்கை மாக்சிஸ போதனைக் குழு

## அரசியல் பொருளாதாரம் பற்றிய

சொற்பொழிவுகள்

| பொருள்: | தேதி நேரம் |
|---|---|
| 1. பொருளாதார நெருக்கடிகளுக்கான காரணம் | 9-7-64 |
| 2. ஏகாதிபத்திய ஏகபோகத்தின் வளர்ச்சி | 21-7-64 |
| 3. சோஷலிஸப் பொருளாதாரம் | 30-7-64 |

முன் வகுப்புகள் ஆரம்பம் 5 மணி

இவ்வகுப்புகள் டரட் ரோட்டிலுள்ள செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெறும். தற்போது ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே வகுப்புகள் நடைபெறும்.

சொற்பொழிவாளர்:

நா. சண்முகதாசன்

குறிப்பு: இவ்வகுப்புக்கள் மார்க்சிஸ போதனைக் குழு அங்கத்தவர்களுக்கு மட்டுமே. இக் குழுவில் சேர விரும்புவோர் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

ஈ. டி. மூர்த்தி,

பிரான்சிஸ் பெரேரா,

கூட்டுக் காரியதரிசிகள்.

# சி. டி. யூ. எப்.புக்கு 35 லட்ச இந்தோனேஷிய தொழிலாளர்களின் பூரண ஆதரவு

### உலக தொழிற் சங்க செயலாளரின் கேடுகெட்ட சதி

# சொப்ஸி செயலாளரின் அறிக்கை

35 லட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட, ஆசியாவிலேயே சக்திமிக்க தொழிற் சங்க இயக்கமான, இந்தோனேஷிய தொழிற் சங்க சம்மேளனமான சொப்ஸி, அதன் பொதுச் செயலாளர் தோழர் ஜோனேவின் கைச்சாத்திட்ட அறிக்கையொன்றை உலகெங்குமுள்ள தொழிற் சங்கங்களுக்கு அனுப்பியுள்ளது. இந்த அறிக்கையில், இலங்கை தொழிற் சங்க இயக்கத்தில் உருவாகியுள்ள பிரச்சினையை விசேஷமாக தோழர் ஜோனே குறிப்பிட்டுள்ளதுடன், உலக தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளரும், சில திரிபுவாதிகளும் தொழிற் சங்க ஐக்கியத்தை சின்னாபின்னப்படுத்தும் ரீதியில் கேடுகெட்ட, கீழ்த்தர நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதை அம்பலப்படுத்தியுள்ளார். ஈழத்து மார்க்சிஸ்ட்-லெனிஸ்டுகளுக்கும், சி.டி.யூ. எப்.புக்கும் 35 லட்ச இந்தோனேஷியத் தொழிலாளர்ளின் பரிபூரண ஆதரவை இவ்வறிக்கையில் தோழர் ஜோனே பிரகடனப்படுத்தியுள்ளார். இவ்வறிக்கையை இங்கு பூரணமாக வெளியிட்டுள்ளோம்.

இலங்கைப் பிரதிநிதியாக எம். ஜி. மெண்டிஸை ஏற்றுக்கொண்டது சம்பந்தமாக உலக தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசியின் நடத்தையை சொப்ஸி பிரதிநிதி மற்றைய ஆசிய-ஆபிரிக்க பிரதிநிதிகளுடன் சேர்ந்து 1964 மார்ச் 18-20-ல் நடைபெற்ற உலகத் தொழிற் சங்க சம்மேளன செயல் குழுக் கூட்டத்தில் எதிர்த்ததை சொப்ஸியின் தேசியக் கவுன்சில் உறுதிப்படுத்தி ஆதரிக்கின்றது. உலகத் தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைந்த இலங்கை ஸ்தாபனத்தை எம்.ஜி. மெண்டிஸ் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்பது அனைவரும் அறிந்த ஓர் உண்மை. உலகத் தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைந்த இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் (சி.டி.யூ.எப்.) எம்.ஜி. மெண்டிஸை மாற்றும்படி கோரிக்கொண்டது. 1963 டிசம்பர் 21-ம் திகதி ஸ்தாபனத்தைப் பிளவுபடுத்துவதற்காக சி.டி.யூ. எப். மீதும், அதன் தலைவர்கள் மீதும் அநியாயமான தாக்குதல்களைச் சுமத்தியபின், சி.டி.யூ.எப்.16-வதுமாநாட்டிலிருந்து வெளிநடப்புச் செய்தபொழுது எம். ஜி. மெண்டிஸ் சி.டி.யூ.எப்.பில் தனது ஸ்தானத்தை இழந்தார். நா. சண்முகதாசனும், வாட்சண் பர்ணாந்துவும் ஏகமனதாக சி. டி. யூ. எப்.பின் பொதுச் செயலாளராகவும், தலைவராகவும் முறையே தெரிவு செய்யப்பட்டனர். உ.தொ.ச. சம்மேளன செயற் குழுக் கூட்டத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உரிமை அவர்களுக்குத்தான் உண்டு. சோவியத் தூதுகோஷ்டியின் தூண்டுதலின் பேரில் லூயி சயிலன், வெட்கங் கெட்ட முறையில் இலங்கைத்தொழிலாளர்களை, அவர்கள் உ. தொ. ச.சம்மேளன செயற் குழுக் கூட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவதைத் தடைசெய்துள்ளார். அதே நேரத்தில், இலங்கைத் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் நம்பிக்கை வைக்காத, ஆனால், சோவியத் தூதுகோஷ்டியின் விருப்பங்களை அடிமைத்தனமாக நிறைவேற்றுவதற்கு நம்பக்கூடிய ஒருவரை ஏற்றுக்கொண்டுள்ளார்.

## திரிபுவாதத் தந்திரங்கள்

உ. தொ. ச. சம்மேளன உறுப்பினர்களைக் கலந்தாலோசியாது அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் என்று சொல்லப்படுவதை ஆதரிப்பதென உலகத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பெயரைப் பொய்யாகப் பாவித்த வெட்கங் கெட்ட, செருக்கான நடவடிக்கையை நாம்முன்னரே கண்டுள்ளோம். இவ்வொப்பந்தம் வெறும் போலி ஏமாற்று. உ.தொ.ச.சம்மேளன ஒழுங்கு முறையைச் சயிலன் மானங்கெட்ட முறையில் மீறியதை எங்குமுள்ள முற்போக்குத் தொழிலாளர் இயக்கங்கள் வன்மையாகக் கண்டித்தன. சில குறிப்பிட்ட திரிபுவாதிகளின் குறுகிய தேச சார்பு நலன்களுக்குச் செய்யப்பட்ட பிளவு வேலைகளையும் நாம் அறிவோம். அண்மையில் உண்மைச் சுயரூபம் அம்பலமாக்கப்பட்ட ஒரு ஆசிய தலைவனின் சந்தர்ப்பவாத தாக்குதல்கள், முழுக்க முழுக்க திரிபுவாதப் பிளவுத் தந்திரங்களாகும். அத்தகைய பிளவு வேலைகளின் நாசகார முயற்சிகளின் அண்மைக்கால உதாரணமே ஏப்ரில் 10-15-ல் பிராக்கில் நடைபெற்ற அரசாங்க ஊழியர்கள் தொழிற் சங்கங்களின் 3-வது சர்வதேசிய தொழில் மாநாட்டில் கையாள் லூயி சயிலன் எடுத்ததிரிபுவாத நிலையாகும்.

என்றாலும், உ.தொ.ச. சம்மேளனச் செயற் குழுக் கூட்டத்திலிருந்து உண்மையான இலங்கைப் பிரதிநிதியை வெளியில் வைத்திருப்பதற்கு சயிலனும் அவரின் எஜமானரும் செய்த சதிகள், இந்த மகத்தானதொழிலாளர்ஸ்தாபனத்தை வல்லரசுக்களில் ஒன்று என்று கூறப்படுவதன் குறுகிய நலன்களுக்கு பாவிப்பதற்காக அதனைப் பூரணமாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரச் செய்யப்பட்ட விஷத்தன்மை மிக்க அபாயகரமான முயற்சிகளாகும். இப்பிரச்சினை முக்கிய ஸ்தாபனப் பிரச்சினையானபடியாலும், அங்கத்தவர்களின் உரிமைகள் சம்பந்தப்பட்டதானபடியாலுமே விஷத்தன்மை மிக்கதும் அபாயகரமானதுமாகும். ஆகவே, உண்மையில், எவ்வழி செல்லவேண்டும் என்பதை உ. தொ.ச. சம்மேளனம் தீர்மானிக்கவேண்டும். அது மார்க்சிஸ-லெனினிஸ நேர் வழியில் தொழிலாள வர்க்க ஐக்கியம், ஏகாதிபத்தியத்திற்குப் பீதியற்ற புரட்சிகர எதிர்ப்புஆகியவற்றின் பாதையில் செல்லுமா?அல்லது வலதுசாரிப் பாதையில் அதாவது திரிபுவாத, பிளவுவாத, அடிபணிந்து போகும் பாதையில் செல்லுமா?

## எதிர்க்கிறோம்

உ. தொ. ச. சம்மேளனத்தை வலதுசாரிப் பாதைக்கு இழுத்துச் செல்வதில் திரிபுவாதிகள் வெற்றி கண்டால் புதிய சுதந்திர நாடுகளின் சர்வதேசிய தொழிலாளர் இயக்கத்தின் நோக்கங்கள் ஐரோப்பிய ருஷ்யாவின் குறுகிய தேசிய நோக்கங்களுக்கு இரையாக்கப்படும். ஆகவே சயிலன் கும்பலின் தீர்மானத்தைத் தாம் எதிர்ப்பதை உ. தொ. ச. சம்மேளனத்துக்குத் தெரியப்படுத்துமாறும், புடாபெஸ்டில் அக்டோபரில் நடைபெற விருக்கும் உ. தொ. ச. சம்மேளன பொதுக் கவுன்சிலிலும் நடைபெறவிருக்கும் 4-வது உலக மாநாட்டிலும் 1965-ல் சயிலன் கும்பல் தமது நடத்தைகளை விளக்கும்படி கோரும்படியும், சொப்ஸி உ. தொ. க. சம்மேளன உறுப்பினர்களையும், விசேஷமாகத் தமது இயக்கங்கள் பலவீனமுற்று அடிபணிந்து போவதால் மடிந்துபோவதை விரும்பாத ஆசிய ஆபிரிக்க முற்போக்குத் தொழிலாளர் இயக்கங்களையும் கேட்டுக்கொள்கின்றது. தொழிலாளர் சர்வதேசிய இயக்கத்தின் ஜனநாயகநோக்கங்களை இங்ஙனம் செருக்குடன் அவமதிப்பதைத் திருத்துவதற்கு பொதுக்கவுன்சிலினதும் உரிமை மட்டுமல்லாது கடமையுமாகும். தொழிலாளர் இயக்கத்தை அழித்துவிட முடியாது. ஆனால் திரிபுவாதிகளின் தவறுகளைத் திருத்தப் பொதுக் கவுன்சிலிலும் உலக மாநாடும் தவறினால் உ. தொ. ச. சம்மேளனம் தொழிலாளர் இயக்கத்தின் கருவியாக முடியாது.

## ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு

ஆசிய-ஆபிரிக்கத் தொழிலாளர்களின் மாநாடொன்றிற்கான தயாரிப்பு வேலைகளில் சொப்ஸி பெருமையுடன் பங்கு பற்றியுள்ளது. ஆசிய ஆபிரிக்க முற்போக்கு தொழிலாளர் இயக்கங்களிடையே புரட்சிகர ஐக்கியத்தை உருவாக்குவதில் இந்த முன் முயற்சி விளைந்துள்ளது என்பது எமது நம்பிக்கை. ஆசிய-ஆப்பிரிக்க தொழிலாளர் மாநாட்டிற்கான முதலாவது தயாரிப்புக் கூட்டத்தில் தொழிலாளர்களின் முதலாம் நம்பர் எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முன்னால் கெஞ்சுவதற்கு விருப்பமான அடிபணிந்து போகும் யாருமே ஆசிய அல்லது ஆபிரிக்க தொழிலாளர் மத்தியில் காணப்படவில்லை. ஏகாதிபத்தியம், காலனி முறை, புதிய காலனி முறை ஆகியவற்றை எதிர்த்த ஆசிய-ஆபிரிக்க தொழிலாளர் போராட்டத்தை ஒதுக்குபவர்களுக்கும், தமது குறுகிய நலன்களுக்காகத் தொழிலாளர் இயக்கத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ் வைத்திருக்க முயற்சிக்கும் சயிலன் போன்றவர்களுக்கும் ஒரு எச்சரிக்கை. ஆசிய ஆபிரிக்க தொழிலாளர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவர். அவசியம் வந்தால் இப்பொழுதே உருவாகும் மாற்றுவழி மூலம் தமது குரலை வெளியிடுவர். புரட்சிகரப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் உறுதியில் சொப்ஸியும் மற்றும் தொழிலாளர் இயக்கங்களும் ஐக்கியப்பட்டுள்ளன. சில வல்லரசின் கைகளில் பாவைகளாக அவை என்றும் அடிபணிய மாட்டா.

---

5-ம் பக்கத் தொடர்

## கேலிக் கதை

''ஒரு நாள் கார்க்கியும் லெனினும் தனிமையில் இருந்து பேசிக்கொண்டிருந்தனர், அந்த வேளையில் கார்க்கி ஒரு கதை சொல்லிக்கொண்டிருந்தார். கதையின் சாராம்சம் இதுதான். புரட்சி வென்றபிறகு பெரும் சீமாட்டிகளுக்கு எல்லாம் தலைவலி அதிகரித்தது. அந்த வேளையில், ஜார் மன்னனின் நேரடி வாரிசு என்று கூறிக்கொண்ட ஒரு சீமாட்டி, தனது சொகுசுக்கு போதிய வசதி இல்லையே என்ற பெரும் துக்கத்தில் மன வேதனை தாங்காமல் தன்னையே மாய்த்துக்கொள்ள ஆற்றோரம் சென்றுளாம். தங்கள் எஜமானி அம்மாள் ஆற்றில் பாயப்போவதைக் கண்ட அவளின் நான்கு நாய்களும் அவளைக் கவ்விப் பிடித்து, பாயாதவண்ணம் செய்தனவாம். இதனால், அந்தச் சீமாட்டி தனது எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை உருவாயிற்று என்று கூறி, லெனினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டார் கார்க்கி. லெனினுடைய முகம் மாறுபட்டது. கண்கள் மேலும் கீழுமாகக் கார்க்கியைக் கூர்ந்து கவனித்தன. சில வினாடிகள் கண்கள் மூடிக் கொண்டிருந்தன. பின்னர் திறந்தன. லெனின் சாந்தமாகச் சொன்னார். ''இது கற்பனை சிருஷ்டியாக இருந்தால் கூட நான் இக்கதையை ஒதுக்கித்தள்ளி இருக்கமாட்டேன். இதனுள் அடங்கியுள்ள கருத்து அவ்வளவு மோசமானதல்ல'' என்று கூறி, சற்று மௌனமுற்றுவிட்டு, மீண்டும், ''புரட்சி தந்த அருமையான கேலிக் கதை'' என்று கூறிவிட்டு லெனின் சிரித்தார். லெனினைத் தொடர்ந்து கார்க்கியும் சிரித்தார். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு தொடர்ந்து அவர்கள் சிரித்து உருண்டனர்.

---

# அப்புத்தளை வாலிபர்கள் எம் அணியில்

''நமது இளைஞர்கள், சமுதாயத்தில் பின்னடைந்து வருவதற்குக் காரணம், அவர்களிடையே உள்ள ஒற்றுமைக் குறைவும், பிற்போக்குச் சக்திகளின் கோரப் பிடியில் அவர்கள் அகப்பட்டு ஏமாறுதலுமே யாகும். நாம் இளைஞர்கள்; எதிர்கால சிற்பிகள்; புதியதோர் விழிப்புணர்ச்சியுள்ள சமுதாயத்தினை உருவாக்கும் பெரும் பொறுப்பு எங்களுக்கிருக்கின்றது. அதை நாங்கள் உணர வேண்டும்; உணர்ந்து செயல்பட வேண்டும். எங்களது செயல்பாட்டிற்கு எங்களது ஒற்றுமை மிக முக்கியம். அந்த ஒற்றுமையின் கீழ் இந்த மன்றம் இளைஞர் சக்தியினைத் திரட்டி ஓர் புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.''

இவ்வாறு அப்புத்தளை முற்போக்கு வாலிபர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும் போது இ. தோ. தொ.ச. ஊவாப் பொதுப் பிரதிநிதி தோழர் கரவைக் கந்தசாமி அவர்கள் கூறினர். 24-6-64 புதன்கிழமை பி. ப. 2 மணியளவில் இ.தோ.தொ.ச. காரியாலத்தில் நிகழ்ந்த இக் கூட்டத்தில், தோழர்கள் அ. அப்துல் கரீம், க. காதர், க. சோமசுந்தரம், மு. கார்த்திகேயன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்கள்.

நடப்பு வருட நிரந்தர தலைவரா்க தோழர் கரவைக் கந்தசாமி, செயலாளராக:தோழர் அ. அப்துல் கரீம், தனதிகாரியாக: தோழர் ந. சிவஞானம்; உப-தலைவராக: தோழர் க. காதர், உப-செயலாளராக: தோழர் மு. கார்த்திகேயன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தோழர்கள்: சி. வேலு, தி. இரத்தினம், அ. சுப்பிரமணியம், அ. பசீர், ஜ. ஜலீல், க. சோமசுந்தரம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.



கரவைக் கந்தசாமி
(ஊவாப் பிரதிநிதி)

அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குப் பின் நடந்த செயற் குழுக் கூட்டத்தில்,இச் சங்கத்தை இலங்கை முற்போக்கு வாலிபர் சம்மேளனத்தின் அப்புத்தளைக் கிளையாக இணைத்து செயல்படுவதென்றும், சங்கக் காரியாலயத்திலேயே ஒரு சிறு வாசிகசாலை ஏற்படுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (ந.நி)

# 21 கோரிக்கைகள் உருவாக்கிய நிதி மந்திரியே,

# மௌனம் ஏன்?

## தேயிலை, ரப்பர், தெங்கு மற்றும் உற்பத்திப் பொருள் மாநாட்டில் உரை

எமது தேயிலை, ரப்பர், தெங்கு மற்றும் உற்பத்திப் பொருள் தொழிலாளர் சங்கத்தின் 15-வது பிரதிநிதிகள் மாநாடு, கடந்த 27, 28-ந்திகதிகளில், ஸ்ரீ நாராயண குரு மண்டபத்தில் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

21 கோரிக்கைகளை வென்றெடுப்பது சம்பந்தமாகவும், தென்னுப்பிரிக்கா, வெனசுவெலா, தென்-வியட்நாம் ஆகிய நாடுகளில் மக்களின் நியாயமான, நீதியான போராட்டங்களை அடக்கி ஒடுக்க உள்நாட்டு பிற்போக்கு கூட்டமும், ஏகாதிபத்திய வெறியர்களும் செய்கின்ற அட்டூழியங்களைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இம் மாநாட்டில் சங்கப் பொதுச் செயலாளர் தோழர் கே. குலவீரசிங்கம் நிகழ்த்திய பொது உரையை இங்கு தந்துள்ளோம்.

இடதுசாரி முன்னணிக்கு என்ன ஆயிற்று? என்று அங்கத்துவத் தோழர்கள் கேட்கிறார்கள். அதன் திட்டங்கள், சோஷலிஸ சமுதாயத்தை இந்த நாட்டில் ஸ்தாபிக்கப் போவதாகப் போட்ட கூச்சல்களும் என்ன ஆயிற்று? ஐ, இ. மு. இன்று செத்த பிணமாகி விட்டது. அதன் திட்டங்கள் அனைத்தும் புதைகுழியில் சமாதியடைந்து விட்டன.

கொள்கை அடிப்படையில் உருவாகாத ஐக்கிய முன்னணி நீண்ட காலம் நிலைத்து நிற்காது என்று தீர்க்க தரிசனத்துடன் ஆரம்பத்தில் நாங்கள் கூறினோம். அடிப்படைக் கொள்கைகளில், பிரச்சினைகளில் உடன்பாடு காணுது உருவாகும் எந்த ஐக்கியமும் குறுகிய காலத்தில் உடைந்து விடும் என்று நாங்கள் எச்சரித்தோம். கம்யூனிஸ்ட் கட்சியினுள்ளிருந்த திரிபுவாதிகள் அவ்வேளையில் எங்களைப் பார்த்து நகைத்தனர். அடிப்படைக் கொள்கைப் பிரச்சினையை முன் வைத்துஐக்கிய முன்னணியை நாம் சீர்குலைப்பதாகக் கூறினர்.

இந்தத் திரிபுவாதிகளிடம் நாங்கள் இன்று கேட்க விரும்புகிறோம், ஐக்கிய இடதுசாரி முன்னணியை சீர்குலைத்து சின்னுபின்ப்படுத்தியது யார்? ஆம், ஐக்கிய முன்னணியில் ஒரு அங்கமாகவிருந்த சமசமாஜக் கட்சியின் தலைவர்கள் மந்திரிப்பதவி ஏற்றது மூலம் ஐ.இ.மு.யை இன்று தொலைத்துக் கட்டிவிட்டனர்.

இக் கூட்டு அரசாங்கம், லஞ்ச ஊழல்களையும், கருப்பு மார்க்கட் தீமைகளையும், வீண் விரயங்களையும் ஒழித்துக் கட்டிவிடும் என்று சிலர் எங்களுக்கு அறிவுரை தருகிறார்கள். இந்த நீசக் கொடுமை அகற்றப்படல் வேண்டும் என்பதை நாங்கள் பரிபூரணமாக ஏற்றுக்கொள்கிறோம். என்றாலும், ஒன்றை இவர்களுக்குக் கூறியாக வேண்டும். இவைகள் அனைத்தும் முதலாளித்துவத்தின் தோற்றுவாய்கள் என்பதை இவர்கள் உணர வேண்டும். சமூக நிலையைப் மாற்றி அமைக்காமல் இந்த சமுதாயக் கொடுமைகளை அழித்தொழிக்க முடியாது.

கடுமையான, நேர்மையான வேலை நடைபெற வேண்டியது உண்மைதான். ஆனால், சம்பளக் கட்டுப்பாடு கொள்கை பற்றி ஆட்சியினர் என்ன கூற இருக்கிறார்கள்? தொழிலாளர்களுக்கு வேலையும், வீடுகளும் தருவது சம்பந்தமாக ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்? ராக்கட் வேகத்தில் உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவு குறித்து இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

இன்றைய நிதி மந்திரியும், சென்ற கால இலங்கை தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவருமான டாக்டர் என். எம். பெரேரா, 21 கோரிக்கை உருவாக்கியவர்களில் ஒருவர். ஆட்சியின் நிதி அமைச்சர் என்ற ரீதியிலும், அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர் என்ற முறையிலும் 21 கோரிக்கைகள்பற்றி அவர் என்ன சொல்ல விருக்கிறார்? கூட்டரசாங்கத்தின் 14 அம்ச திட்டம் இவைகள் எவைக்குமே பதில் தருவதாக இல்லை. இந்த திட்டத்தில் சில முற்போக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட விருப்பது உண்மையே. ஆனால், இந்த நடவடிக்கைகளால் தொழிலாளிகளின் அடிப்படை குறைகளையும், கஷ்டங்களையும் நீக்க முடியுமா?

நாம் துணிந்து, அறுதியிட்டு கூறுகிறோம். இத்தகைய ஒட்டுப்பிளாஸ்திரி திட்டங்களினுல் நாட்டை எதிர்நோக்கியுள்ள அடிப்படை பிரச்சினைகள் எதையுமே தீர்க்க முடியாது. தொழிலாளர் வர்க்கத்திற்கு ஒரு விஷயத்தை அழுத்தி நாம் கூறவேண்டியவர்களாக இருக்கிறோம். நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் உருவாகும் ஒரு கட்சியினுல் மாத்திரமே தீர்க்கமுடியும். இந்த லட்சியத்தை ஈடேற்ற தொழிலாளர் ஐக்கியம் இன்றியமையாதது.

---

இலங்கை தொழிலாளர்களிடையேயும், தொழிற் சங்க இயக்கத்திலும் தடுமாற்றமும், மயக்க நிலையும் நிலவி வரும் சந்தர்ப்பத்தில் நம் மாநாடு கூடுகிறது. அதோடு, அரசியல் பூகம்பம், சுதந்திரக் கட்சி சமசமாஜக் கட்சி கூட்டரசாங்க உருவகத்தின் பின் ஓரளவு ஓய்ந்துள்ளது.

1963 ஆகஸ்ட் 12-ந் தேதி ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய

---

## காங்கேசன் சிமெந்து கார்ப்பரேஷன் தொழிலாளர்

# வேலை நிறுத்தம்

### நிர்வாகத்தின் கவனயீனமே காரணம்

(கடந்த 29-6-64-ல் துவங்கிய காங்கேசன் சிமேந்து கார்ப்பரேஷன் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் குறித்து சி.டி.யூ.எப். பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் வெளியிட்டுள்ள அறிக்கையை இங்கு பிரசுரித்துள்ளோம்.)

சி. டி. யூ. எப். புடன் இணைந்துள்ள காங்கேசன் சிமேந்து காப்பரேஷன் ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தொழிலாளர்கள், கடந்த 29-6-64-ல் காலை 6 மணிக்கு தமது வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தனர். தமது கோரிக்கைகளுக்கு ஆதரவாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட இத் தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்திற்கு முன் நிர்வாகத்திற்கு 21 நாள் முன்னறிவித்தல் தந்தனர்.

இத் தொழிலாளர்களின் 19 கோரிக்கைகள் சிமேந்து கார்ப்பரேஷன் நிர்வாகத்தினர் முன் 31-2-64-ல் சமர்ப்பிக்கப்பட்டன. இதற்கு நிர்வாகத்தினர் நான்கு மாதங்கள் கடந்தும் எவ்வித பதிலும் தராத காரணத்தால், 3-6-64-ல் தொழிற் சங்கம் 21 நாள் வேலை நிறுத்த முன்னறிவித்தல் தந்தது. இந்த முன்னறிவித்தல் 24-6-64-ல் முடிவுற்றது.

தொழிலாளர்களின் பிரதான கோரிக்கைகள் பின்வருமாறு:

1. வாரத்திற்கு 45 மணி நேர வேலை.
2. வருடத்திற்கு 7 நாள் கெசுவல் விடுமுறை.
3. தினச் சம்பளத்தை மாதச் சம்பளமாக்குவது.
4. சரியான உத்தியோக மதிப்பீடு.
5. தொழிலாளர்கள் சிறிய முறையில் நியமனப் படுத்தப்பட வேண்டும்.
6. சம்பள அதிகரிப்பு முறை விசாரிக்கப்பட வேண்டும்.

நிர்வாகத்தின் கவனயீனமும், பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட தாமதமுமே வேலை நிறுத்தத்திற்கு வழிகோலின. நிரந்தர தலைவர் இல்லாமையும், ஸ்தல தொழில் மானேஜரின் தொழிற் சங்க எதிர்ப்புக் கொள்கையும் வேலைநிறுத்தத்திற்கான மற்றைய காரணங்களாகும்.

---

## பதுளை மொடர்ன் தியேட்டரில்

# போராட்டம்

## 21 கோரிக்கைகள் சமர்ப்பித்தனர்

இலங்கை சினிமா பிலிம் ஸ்டுடியோ ஊழியர் சங்கத்தின் பதுளை மொடர்ன் தியேட்டர் ஊழியர்களின் கூட்டம் கடந்த 11-6-64-ம் திகதி சங்கக் காரியாலயத்தில் தோழர் கே.ஜி. சைமன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்காணும் 12 கோரிக்கைகளை நிர்வாகத்திற்கு சமர்ப்பித்து நடவடிக்கை எடுப்பதென ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது.

1. அநியாயமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ள தோழர் எம். ராமையாவுக்கு உடனடியாக மீண்டும் வேலை கொடுக்கப்படல் வேண்டும்.
2. பெல்கனி, 1-ம் வகுப்பு, கலரி, ஆகியவற்றிற்கு டிக்கற் விநியோகிக்கும் குமாஸ்தாக்கள் நியமிக்கப்படல் வேண்டும். இவ் வேலையை தற்போது எதுவித ஊதியமுமில்லாது ஒப்பரேட்டர்கள் தான் செய்கிறார்கள்.
3. ஹோல் போய்களுக்கு ஒரு நாளைக்கு 8 மணித்தியாள வேலை கொடுக்கப்படல் வேண்டும். மேலதிக நேர வேலைக்கு மேலதிக சம்பளம் (ஓவர்டைம்) கொடுக்கப்படல் வேண்டும்.
4. படங்களைப் பரிசீலனை செய்யும் ஒப்பரேட்டர்களுக்கு மேலதிக சம்பளம் அல்லது பட்டா கொடுபடல் வேண்டும்.
5. தற்போது ஒப்பரேட்டர்களினுல் செய்யப்படும் சித்ர (போஸ்டர் - விளம்பரம் வரைதல்) வேலைகளை தொடர்ந்தும் அவர்களே செய்ய வேண்டுமெனில் ஆகக் குறைந்த சம்பளமாக ரூ. 35/- தலா கொடுக்கப்படல் வேண்டும்.
6. ஒவ்வொரு விளம்பர சிலேட் வரைதலுக்கும் ரூ. 1/50 கொடுக்கப்படல் வேண்டும்.
7. வெளிப்புற விளம்பரங்களுக்கு புறம்பாக ஒருவரை நியமித்தல் வேண்டும். மற்றும் வேலைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களை செய்யுமாறு நிர்ப்பந்திக்கக் கூடாது.
8. தற்போது வேலை செய்யும் ஊழியருக்கு தகுதித் தரப் பிரகாரம் தகுதிக்கொப்ப சம்பளம் கொடுபடல் வேண்டும்.
9. அடிப்படைச் சம்பளத்தில் வருடாந்த சம்பள உயர்வு சேவைக்காலத்திற் கொப்ப கொடுபடல் வேண்டும்.
10. ஒவ்வொரு மாத சம்பளமும் அந்தந்தமாத முடிவில் கொடுபடல் வேண்டும்.
11. முன்பணம் ஒவ்வொரு மாத மத்தியிலும் கொடுபடல் வேண்டும்.
12. தற்போது நடைமுறையிலிருக்கும் ஊழியர்கள் இலவச பாஸ்கள் நான்கைவிட அதிகமாக ஆறு, எட்டாக உயர்த்தப்பட்டு, 1-ம் வகுப்பு அல்லது அதற்கும் உயர் வகுப்புகளில் அமர அனுமதிக்கப்படல் வேண்டும்.

---

● 2-ம் பக்கத் தொடர்

## அன்றும்-இன்றும்

நேற்று புரட்சி பேசியவர்கள் இன்று அதற்கு நேர்மாருகப் பேசுகிறார்கள், நேற்று அரசாங்க ஊழல்களைப் பற்றிப் பேசினவர்கள் இன்று உயர்தர அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் அதை ஒழிக்கப் போகிறோம் என்று கூறுகிறார்கள். நேற்று பிரபுத்துவ பண்டாரநாயக்காவின் (றதல) அரசாங்கம் என்றும் முதலாளிகளின் கைக்கூலி அரசாங்கம் என்றும் கூறினவர்கள், இன்று அதே அரசாங்கத்தின் ஆசனங்களில் அமர்ந்தவுடன் குமாஸ்தாக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் கூடுதல் வேலைசெய்யச் சொல்லுகிறார்கள். உற்பத்தியை பெருக்கச் சொல்லுகிறார்கள். இன்னும் என்னவோ நாளை மறுநாளையும் கூறத்தான் போகிறார்கள். ஆகவே, புரட்சி என்பது, இலஞ்ச ஊழல் ஒழிப்பு என்பது, சமுக மாற்றம் என்பது, ஏன் தொழிலாளர், விவசாய சமசமாஜ அரசாங்கம் என்பதெல்லாம் சில சமசமாஜத் தலைவர்களுக்கு மந்திரி பதவிகள் கிடைப்பதற்காகத்தான் என்பது இப்பொழுது உறுதியாகிவிட்டது. இவ்வளவு சீக்கிரத்தில் சமசமாஜிகளினதும், திரிபுவாத சோம்பேறிகளினதும் முகமூடி கிழித்தெறியப்படும் என்று யாருமே நம்பியிருக்க மாட்டார்கள். இவ்வளவு சீக்கிரமாக இந்த முடிவு தென்பட்டது இந்நாட்டு பாட்டாளி வர்க்கத்தின் பேரதிருஷ்டமாகும்.

ஈழத்துப் பாட்டாளி வர்க்கத்தின் பாதை என்றுமே இல்லாதவாறு இன்று அரசியல் பரிசுத்த மடைந்துள்ளது. பாட்டாளி வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்த பகல் வேஷதாரிகள், திரிபுவாத பீடைகள், குணசிங்கா ஆவேசக்காரர்கள், இன்னும்பல கழிசடைகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறையும் காலம் நெருங்கிவிட்டது. ஆகவே, கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த 21-வது வருடாந்த விழாவை மகிழ்ச்சிகரமாக கொண்டாடும் பொழுது நாம் உண்மையான-நேர்மையான மார்க்ஸிஸ்டுகள், லெனினிஸ்டுகள் என்பதை பெருமையாக கூறிக்கொள்வோம்-முன்னேறுவோம்- வாகை சூடுவோம்.

---

### அடுத்த இதழில்

தேயிலை, ரப்பர், தெங்கு மற்றும் உற்பத்திப் பொருள் தொழிற் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் கே. குலவீரசிங்கம், மேற்படி சங்கத்தின் 15-வது பிரதிநிதிகள் மாநாட்டிற்கு சமர்ப்பித்த அறிக்கையின் சுருக்கம் அடுத்த இதழில் இடம் பெறும்.

---

வெளிவந்துவிட்டது

# கம்யூனிஸ்ட்

மார்க்சிஸ-லெனினிஸ தத்துவ ஜூன் மாத இதழ்

ஆசிரியர்: நா. சண்முகதாசன்

கிடைக்குமிடம்: 123, யூனியன் பிளேஸ் கொழும்பு-2

# கோடீஸ்வரனின் தடுமாற்றம்

"முதலாளித்துவத்தின் அழிவிலேதான் சோஷலிஸம் உருவாக முடியும் என்ற நியதியுடன், வகுப்புவாதத்தின் கோர தாண்டவமும் அப்பொழுதுதான் அழிவெய்தும்'' என்று கடந்த 17-ம் திகதி உணவு இலாகா ஊழியர்கள் கூட்டத்தில் திரு. செ. கோடீஸ்வரன் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார்.

'தேசிய இன,சிறுபான்மையினர் பிரச்சினே, சோஷலிஸ சமுதாயத்தை அடைதல் என்ற பிரச்சினேயின் ஒரு பகுதியே. தொழிலாளி வர்க்கத்தின் கீழான சோஷலிஸ அமைப்பிற்தான் இனங்களின் உண்மையான சமத்துவம் அடையப்பெற முடியும்' என்ற சரியான புரட்சிகர சித்தாந்தத்தைத் திரு. கோடீஸ்வரன் இவ்வாறு தம் சொந்த வார்த்தைகளில் வெளியிடுகிருர்.

## "சோஷலிசத்தில்தான் இன சமத்துவம்; மொழிவழி தொழிற்சங்கங்கள் பிரியவேண்டும்!''

## முன்னுக்குப்பின் முரண்பாடு ஏன்?

ஆனல், தொடர்ந்து பேசிய திரு. கோடீஸ்வரன் ''இங்கு சோஷலிஸம் பேசுவோர் முதலாளித்துவத்துடன் இணைந்துள்ள'' தனல் ''சோஷலிஸ சமுதாயத்தை இனிமேல் இங்கு எதிர்பார்க்க முடியாது'' என விரக்தி பேசினர்.

சோஷலிஸப் ''பெருந் தலைவர்கள்'' எனப்பட்டோர் இன்று முதலாளித்துவத்துடன் இணைந்துள்ளது உண்மைதான். திரு. கோடீஸ்வரன் அதற்காகத் தம்மைச் சுற்றி உள்ள நிலைமைக்குக் கண்ணை மூடிக் கொண்டு சோஷலிஸ இயக்கமே முதலாத்துவத்துடன் இணைந்துவிட்டதாகக் கற்பனை செய்து கொண்டு திணறுகிருர். தொழிலாளி வர்க்கத்தின் தளராத சோஷலிஸ, போராட்ட உணர்வை அவர் காணத் தவறுகிருர்.

இந்தக் கற்பனையாலும்,கண்மூடிப் பார்வையாலும் ஏற்பட்ட விரக்தியில் அவர் பழையபடி, சோஷலிஸ இயக்கத்திற்குப் புறம்பாகத் தமிழ் மக்களின் இன உரிமைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என்ற சோஷலிஸத்தில் போய் விழுகிருர்.

இதே போக்கில் அவர் மீண்டும் ''மொழிவழித் தொழிற் சங்க இயக்கம்'' என்ற அவரது பேச்சில் முதலில் தொனித்த யதார்த்தமான, சரியான இனப் பிரச்சினைக் கண்ணோட்டத்திற்கு நேர் முரணை, வகுப்புவாத, முதலாளித்துவ, தொழிலாளர் ஐக்கிய விரோதக் கோஷத்தையும் எழுப்பி, இந்த ''மொழி வழித் தொழிற் சங்க'' இயக்கத்திற்கு ஒரு ''சரித்திரம்'' பற்றிப் பேசவும் தலைப்பட்டார்.

திரு. கோடீஸ்வரன் இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலையையும் தொழிற் சங்க இயக்கத்தையும் ஒரு கால் உற்று நோக்கிவிட்டு மீண்டும் பதிலளிப்பாரா? இலங்கையில் சோஷலிஸ இயக்கம் முதலாளித்துவத்துடன் இணைந்து விட்டதுதானு?

அவர் உலக நாடுகளின் வரலாற்றை உற்று நோக்கி விட்டு மீண்டும் பதிலளிப்பாரா? எந்த நாட்டிலாவது சோஷலிஸ இயக்கத்தின் ஒரு சில 'தலைவர்கள்' அதற்குத் துரோகமிழைத்து முதலாளித்

**க. குமாரலிங்கம்**

துவத்துடன் இணைந்திராத வரலாறு உண்டா? அப்படி அவர்கள் இணைந்தால் ஒரு நாட்டிலாவது சோஷலிஸ இயக்கமே அற்றுப்போனதாகத்தான் வரலாறு உண்டா? அப்படி அவர்கள் இணைந்த பின்னரும் சோஷலிஸப் புரட்சி வெற்றி பெற்று, சோஷலிஸ அமைப்பும் உண்மையான இன சமத்துவமும் நிறுவப்பட்ட நாடுகள் வரலாற்றில் இல்லையா?

# நாட்டு நடப்பு

# கழிசடைக் கும்லின் குழறுபடி!

## தீவட்டித் திரிபுவாதிகளின் சாலைம்!

"சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்தப்படும் வரையும், அது அமுல் படுத்தப்படும் வரையும் ஏன் பொறுத்திருக்கக் கூடாது. ஏன் இந்த ஆவேசம்?'' என்று பீட்டர் கெனமனதும் விக்கிரம சிங்காவினதும் அஞ்சல் ஏடாக வெளி வரும் திரிபுவாத கழிசடை ஏடுகள் ஊருக்கு உபதேசம் செய்கின்றன. சரி இந்தஉபதேசத்தை ஒரு நிமிடத்திற்கு சரி என்றுஏற்றுக்கொள்ளுவோம். ஆனல் இந்த உபதேசம் ஊருக்கு மாத்திரம் தானு? ஏன் அவர்கள் இதைக் கடைப்பிடிக்கக் கூடாது?

சிம்மாசனப் பிரசங்கத்தை மாத்திரமே இந்த நாட்டு மக்கள் எதிர்பார்க்கிருர்கள்: இல்லை. அகில உலக பொருளாதார நிபுணரும் ஹெரால் லாஸ்கியின் சிஷ்யரும், இடதுசாரிஐக்கியமுன்னணியின் தலைவராயிருந்து இடைவெளியில் ஓடிப்போனவருமான டாக்டர் என். எம். பெரேராவின் பட்ஜட் பிரசங்கத்தை அகில உலகத் தலை நகரங்களும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதை திரிபுவாதிகள் மறந்து விட்டார்கள். பொறுமையும், அமைதியும் பண்பட்ட மனிதர்களின் இதயத்தை சிறந்த முறையில் பளிங்கு போல் எடுத்துக் காட்டும். ஆனல், பட்ஜட் பிரசங்கம் நிகழ்த்தும் நாள் நெருங்கி வர வர திரிபுவாதிகளின் பதட்டமும் மரண ஓலமும் பெருகி வருவதை நம்மால் சிறந்த முறையில் அறிய முடிகிறது.

கடந்த 22-23-ந் திகதிகளில், திரிபுவாதிகளின் தீவட்டிக் கூட்டம் (மத்தியக் கமிட்டி) இன்றைய அரசாங்கத்தைப் பற்றி முடிவெடுக்கப் போவதாக பத்திரிகைகளில் தம்பட்டம் அடிக்கப்பட்டிருந்தது. ஆனல், சாது சரணங்கராவின் புதிய ஆராய்ச்சி தந்த அறிக்கை, ''காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா அவர்களுக்குச் செய்ய முடியாது போனவைகளை எல்லாம் திருமதி. பண்டாரநாயக்கா தன் ஆட்சியில் செய்வதையிட்டு நாம் சந்தோஷமடைகிருேம். அத்துடன் முழு ஐக்கிய முன்னணியையும்சேர்த்துக்கொண்டு முன்னேக்கிச் செல்லுவதன்மூலம் சுரண்டலை ஒழித்து, வறுமை நீக்கி ஒரு விஞ்ஞான சோஷலிசத்தை ஏற்படுத்துவதற்கு சகல ஒத்துழைப்பையும் நாம் அளிப்போம்'' என்று 22-ந் திகதி தினமிஞ பத்திரிகையின் ஆசிரியர் கடிதத்தில் எழுதி பிரசுரித்து விட்டுத்தான் (ஆ) சாமி 5த்தியக் கமிட்டி கூட்டத்திற்கு சென்ருர். இரண்டு நாள் கழித்து திரிபுவாதிகளின் அறிக்கையை-ஓலத்தை மக்கள் பார்த்தார்கள்.

அடுத்து அப்புக்காத்து திலகரத்ன அவர்கள் சட்ட வரம்பையும் மீறி, கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் எட்டியாந் தோட்டையில் நடைபெற்ற இலங்கை-சோவியத் நண்பர்கள் கூட்டத்தில் கூட்டரசாங்கத்திற்கு திரிபுவாதிகள் என்ன செய்திருக்க வேண்டும் என்று புத்திமதிகள் கூறியிருந்தார். மேலும் அவர் அதன்பின் வந்த அறிக்கைகளுக்கு எதிராக ஸ்ரீ லங்கா சுவர்க்கத்தில் நுழைவதற்குரிய வகையில் பத்திரிகைகளில் எழுதி வந்தார். இன்று, சுதந்திரக் கட்சி பாராளுமன்ற அங்கத்தவர் பகுதியில் ஆசனம் கோரியுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், இலங்கை சமசமாஜக் கட்சியும் சேர்ந்து அமைத்த 14 அம்ச திட்டத்தின் பிரகாரம் ஏற்பட்ட கூட்டரசாங்கம் மக்கள் எதிர்பார்த்த முற்போக்கு அரசாங்கம் இல்லை என்று திரிபுவாதத் தலைவர் பீட்டர் கெனமன் மட்டக்களப்பில் கூறியுள்ளார். ஆனல், இடதுசாரி ஐக்கிய முன்னணியின் வேலைத் திட்டத்தை முன்வைத்தே ஸ்ரீ லங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினேன் என்று நிதி மந்திரியாவதற்கு முன் என். எம். பெரேரா அவர்கள் அறிக்கை வெளியிட்டிருந்தார். பகிரங்கமாகவே திருவாளர்கள் என். எம். பெரேராவும் பிலிப் குணவர்தனவும் தங்கள் தங்கள் கட்சித் தலைமையிலிருந்தே பிறந்த வீட்டிலிருந்தே ஐக்கிய முன்னணி மாண்டுவிட்டதாக அறிக்கையும் வெளியிட்டிருந்தார்கள். இருந்தாலும் கூட கொட்டா ரோட் கும்பலுக்கு இன்னும் ஐக்கிய முன்னணி இருக்கிறதாம். ஆம்! நீங்கள் சுடுகாட்டுக்குப் போகும் வரை அது இருந்துதானே ஆக வேண்டும்.

சிம்மாசனப் பிரசங்கத்தைக் கேட்பதற்கு திரிபுவாத சாதுக்களுக்கு பொறுமை வேண்டும். சாது சரணங்கராவின் அச்சகப் பெயரில் ஒரு சுவரொட்டி வெளிவந்திருக்கிறது. பௌத்த கலாச்சாரத் தலைவர் திரு. பிலிப் குணவர்தனவின் எம். ஈ. பியையும், திரிபுவாத கழிசடைகளையும் அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ளும்படி முழந்தாளிட்டு அது கெஞ்சி மன்ருடுகிறது. ஐயோ பாவம்! கொட்டா ரோட் கும்பலின் தலைவிதி இப்படியா ஆக வேண்டும். கடைசியாக வந்த சுவரொட்டியில் விலாசம் கூட இல்லை.

# உங்கள் நிதி எங்கே?

## வர்க்கக் கடமையை நிறைவேற்ற முன் வாருங்கள்

எமது புரட்சிகர இயக்கத்தின் சக்திமிக்க கருவிகளான 'தொழிலாளி' 'கம்கருவா' ஆகிய இரு பத்திரிகைகளின் வளர்ச்சிக்கும் நாம் துவக்கியுள்ள ரூ 1/- நிதிதிரட்டும் இயக்கம் வெற்றிகரமாக முன்னேறி வருகிறது.

இந்நிதி திரட்டும் இயக்கத்தில் நீங்கள் அணிதிரண்டு விட்டீர்களா? இல்லையெனில் உடனடியாக உங்கள் கடமையை செய்ய முன்வாருங்கள். முதலில் உங்களின் நிதித் தொகையை அனுப்பித் தாருங்கள். அல்லது நிதி திரட்ட நாங்கள் நியமித்துள்ள தோழரை நேரில் கண்டு கொடுங்கள். நிதி பெறும் தோழர்கள் தம்முடன் இது சம்பந்தப்பட்ட உத்தியோக பூர்வமான அத்தாட்சிப் பத்திரங்கள் பெற்றிருப்பார்கள்.

வாரப்பத்திரிகைகள் அச்சிடுவதில், அதிலும் விசேஷமாக, நமது பத்திரிகைகளைப் போன்ற அரசியல் பத்திரிகைகள் வெளியிடுவதிலுள்ள சிரமத்தை சகல தோழர்களும் அறிவார்கள் என்று நினைக்கிருேம். இதனல், ஏற்படும் பொருளாதார நஷ்டமும், நெருக்கடியும் மிகவும் பாரதூரமானது. இந்த நஷ்டத்தைப் போக்கவுள்ள ஒரே வழி, விளம்பரங்களை அதிகரிப்பது. அதோடு, நிதி உதவி பெறுவது. போராட்ட செய்திகளையும், புரட்சிகரக் கொள்கைகளைப் பரப்பவும் தொண்டாற்றும் எம் பத்திரிகைகளுக்கு பலர் விளம்பரம் தந்து ஆதரிப்பார்கள் என்று கூறுவதற்கில்லை. எனவே, எமது ஆதரவாளர்களின், அனுதாபிகளின் உதவியிலும், ஒத்தாசையிலுமே எமது பத்திரிகைகளை நடத்தவேண்டியுள்ளது. இதை ஒவ்வொரு தோழரும் உணரவேண்டும்.

எனவேதான், குறைந்த பட்சம் மாதத்திற்கு ரூ 1/- தரும்5000நன்கொடையாளர்களைச் சேர்க்கும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளோம். அரசியல் உணர்வுபெற்ற, வர்க்க போதமுள்ள சகல தொழிலாளர்களுக்கும் விசேஷமாக நாங்கள் கூறவிரும்புவது இதுதான். இவை உங்களின் பத்திரிகைகள். இப்பத்திரிகைகள் மட்டுமே உங்களை தத்துவ ரீதியில் வளர்ந்து முன்னேறச் செய்வதுடன், இன்றைய நெருக்கடியான, சிக்கலான அரசியல் சூழ் நிலையில் புரட்சிகரத் தலைமையை உருவாக்க முன்னின்று இயக்கம் நடத்தி வருகின்றன. எனவே, உங்களின் இப் பத்திரிகைகளுக்கு போதிய உதவி அளிப்பது உங்களின் வர்க்கக் கடமையாகும். உங்களின் நிதியைத் தாமதமின்றி அனுப்பித் தாருங்கள். தொடர்ந்து உங்கள் நிதியை தந்து இயக்கப் பத்திரிகையை வளருங்கள்.

என். சண்முகதாசன்
தேசிய அமைப்பாளர்,
இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி.

ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமை
என்னும் தலைப்பில்

**பகிரங்க சொற்பொழிவு**

1964, ஜூலை மாதம் 15-ம் திகதி புதன்கிழமை
மாலை 5.30 மணி
ஸ்ரீ நாராயணகுரு மண்டபத்தில்
(லயாட்ஸ் பிரோட்வே) நடைபெறும்

சொற்பொழிவாளர்:
**தோழர் பிரேமலால் குமாரசிறி**
(பொதுச் செயலாளர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி)

இப்படிக்கு:
இலங்கைக் கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு
வாலிபர் சங்க சம்மேளனம்
(கொழும்பு மாவட்டக் கமிட்டி)

இலங்கையில்

## இந்தோ-சீன ஜெனீவா ஒப்பந்த தினம்

இலங்கை-வியட்நாம் நட்புறவுக் கமிட்டியின் செயற் கமிட்டிக் கூட்டம், கடந்த 29-ந் தேதி, உதவி கலாச்சார மந்திரி செனட்டர் சந்திரா குணசேகராவின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. இந்தோ-சீனம் சம்பந்தமான ஜெனீவா ஒப்பந்தம் உருவான 10-வது வருடாந்திர விழாவை ஜூலை 20-ந் திகதி நடத்துவது:

2. டவுண் ஹாலில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு சகல கட்சித் தலைவர்களையும் உரைநிகழ்த்த அழைப்பது.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஹசன் மொஹிதீன்பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: 'தொழிலாளி' அச்சகம் 9, டிமெல் வீதி, கொழும்பு-2.